1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 9-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு பங்குனிமாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## மண்குதிரைபோன்ற மானிடஉடல்

இப்பிரபஞ்ச வாழ்க்கை ஒரு சத்திரத்தின் வாழ்க்கை. நம் முன்னோர்களும், முன்னோரின் முன்னோர்களும் இருந்தார்கள். எல்லோரும் இறந்தார்கள். இன்று சீவித்துவருகிற நாமும் அவர்களைப்போல ஒருநாள் சாக வேண்டியவர்களே. நமதுசந்ததிகளும் அவ்வாறே. சர்வேசுரன் கட்டளையை மீறிக் கனியைப் புசித்த ஆதாம்ஏவையின் சந்ததிகள்நாம். அவர்களுடைய பாவத்தின் தண்டனையாகிய சாவை நாம் பிறப்புரிமை யாக்கிக் கொண்டோம். அவர்களில் ஒருவன் நீ. இதை நீஅறிவாயா?

இவ்வுலக வாழ்க்கை ஒருசத்திரத்தின் வாழ்க்கை என்றோம். ஆம், மண்குதிரை போன்ற இந்தமாமிசபிண்ட மனிததேகத்திற்குள் நமது ஆத்துமாவும் சொற்பகாலம் அடைபட்டிருக்கிறது. இவற்றில் இம்மண் பிண்டமாகிய தேகம் பெரிதா? அல்லது அதனுள் அடைபட்டிருக்கும் ஆத்துமா பெரிதா? என்பதை நாம்சிந்திப்பதில்லை. நவநாகரீகம்மலிந்த இந்தஇருபதாம் நூற்றாண்டிலே, கடவுளில்லையென்று கண்மூடித்தனமாய்ச் சாதிக்கும் இந்நாளிலே, மண்ணால்உண்டாக்கப்பட்ட இம்மானிடஉடல் மண்ணோடு மண்ணாகட்டுமென்று சர்வேசுரன் சபித்ததை முற்றிலும் மறந்து, இத்தேகமே சதமென்றும், அதன் இச்சைகளே பரமபாக்கியமென்றும் பேணிவளர்த்துப் பலபாவ அக்கிரமங்களைத் துணிந்து கட்டிக்கொள்கின்றனர் ஆடவரும் பெண்டீரும். என்ன பேதமை இது! உன் தேகம் கடிவாளமற்ற ஒருகுதிரைக்குச் சமானம். இதை நீ உணர்வாயா?

உடலைச் சதமெனப் பேணி வளர்ப்பதில் பெண்பாலார் பெரும் சிரத்தையுடையவர். பெண்ணென்றால் பேயுமிரங்குமாம். மண்ணுலகத்தை மயக்கிக் கெடுக்கும் சாத்தானையே மயங்கச் செய்திடுவர் பெண்ணுகப்பிறந்தோர். எப்படியெனில், கண்களுக்கு மைதீட்டி, கூந்தலைத் தளுக்காகவாரி, சடைபின்னி, அதில் அளவுக்குமீறிப் பூக்கள்வைத்து, பவளச்செவ்வாயென வர்ணங்கள்பூசி, ஆபரணங்களால் அலங்கரித்து, அலங்கோலமாய்ச் சினிமாச்சாலைகளுக்கும், பலபேர்கூடும் இடங்களுக்கும் கொஞ்சமும் அச்சம், நாணம் முதலாம் பெண்களுக்குரிய லக்ஷணங்களின்றி உலாவித்திரிகின்றனர். தேவாலயங்களிலும், தேவசந்நிதியிலும்கூடக் கொஞ்சமும் பயபக்திஇல்லாது மனச்சாட்சியற்றுப் பெண்கள் சிலர் பிரவேசிப்பது என்னபரிதாபம்! அன்று பாவி மதலேனாள் பல இராச புத்திரர்களைத் தன்மோகாந்திரவலையில் சிறையிட்டு அவர்கள் தனதுகடைக் கண்பார்வைக்குக் காத்திருக்கும்படி செய்தாள். ஆனால், அவளுக்கு ஒருநாள்வந்தது. யேசுநாயகர் திருஷ்டி அவள்மேல் விழுந்தது. காமக்கனல்கக்கும் அவள்கண்கள் அவர்கண்களைச் சந்தித்தன. என்ன புதுமை! பூதஉடலின் அநித்தியம் அவள் ஞானக்கண்முன் தோன்றியது. உடனே வீசிஎறிந்தாள் தன் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை. தூசியெனத் துறந்தாள் இராசபோகங்களை. பெண்ணின் பெருமிதகுணங்கள் உதித்தன அவள் உள்ளத்திலே. துடித்தெழுந்தாள். தெய்வீகநாதரின் திருப்பாதத்தில் விழுந்து பரிமளதைலத்தால் அதைக் கழுவி உத்தம மனஸ்தாபப்பட்டுப் பாவமன்னிப்பு வேண்டினாள். மனந்திரும்பி மன்னிப்படைந்தபின் அவர் போதனையையே தன்வாழ்வின் லட்சியமாகக்கொண்டு வாழ்ந்தாள். அவளைப்போல் நாமும் மனந்திரும்பிப் புனிதமாகவேண்டும். இவ்விதம் நீ செய்வாயா?

மண்பானையிலே பொத்தல் ஒன்று ஏற்பட்டால் அதைப்பத்திரப்படுத்தாமல் வீசியெறிகிறோம். அதேமண்ணால் உண்டாக்கப்பட்ட இந்தநீச உடலில் ஒன்பதுதுவாரங்கள் மட்டுமல்ல, உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை ஒரேபொத்தல்மயந்தான். அப்படியிருக்க, ஏன்மண்பாண்டமாகிய இத்தேகத்தை மட்டும் சர்வசாக்கிரதையுடன் காப்பாற்றிவருகிறோம்? தேகத்தின் நவதுவாரங்கள் வழியாக வரும்சகலமும் துர்நாற்றமுடையது. அசுசியானது. அருவருக்கத்தக்கது. இவ்வுடலைவிட ஒரு ஆட்டின் அல்லது மாட்டின் தேகம் எவ்வளவோபிரயோசனமுள்ளது. இவ்வுடல் புல்பூண்டு, செடி கொடி, பொன் வெள்ளி, வைடூரிய நவரத்தினங்களாக இருந்திருக்குமாகில் எவ்வளவு பயன்தரும்! யானைஇருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம்பொன். ஒருபிரபல அமெரிக்க சாஸ்திரி இத்தேகத்தின்விலை மூன்றரைரூபா என மதிப்பிட்டிருக்கிறாராம். இவ்வுடல் காற்றடைத்தபை. மண்பாண்டம். இம்மைக்கும் பயனளிப்பதாயில்லை. மறுமைக்கும் உகந்ததாயில்லை. இதை நீ சிந்திப்பாயா?

இந்த ஐம்புலன்களினதும் ஆசாபாசங்களை அடக்கி ஆளும்பொருட்டே தபோதனர்களும், முனிவர்களும் காடுவனாந்தரஞ்சென்று மலைக்குகைகளில் ஒடுங்கித் தபஞ்செய்து தேகத்தை தண்டித்து மூவாசைகளை முற்றிலும்மறந்து, அநித்தியவாழ்வைத் துறந்து, நித்திய பேரின்பவாழ்வை யடைந்தனர்என்று வேத புத்தகங்களிலும், பெரியோர் சொல் வாக்குகள்மூலமாகவும் அறிகிறோம். இதேபோல்நாமும் சிற்றின்பத்தைவிட்டுப் பேரின்பத்தைப் பெறும் வரத்தைத் தரும்படி தினமும் மன்றாடுவோமாக!

## தேவாமுதம் அல்லது ஞானவாசிப்பு

[முன்தொடர்ச்சி]

2. ஆனால், பிரியசகோதரமே! மெய்யாகவே உண்மையானபக்தி கெடுப்பது ஒன்றுமில்லை. இன்னும் சரியாய்ச் சொல்ல வேண்டுமானால் இது சீர்ப்படுத்தாதகாரியம் ஒன்றுமில்லை. எவருடைய கிரமமான அந்தஸ்துக்காகிலும் இது நஷ்டம்வருவிக்குமேயாகில் அதைக் கொண்டு இது மெய்யானபக்தியல்லவென்று அறிந்துகொள்ளலாம். தேனீக்கள் புஷ்பங்களிலுள்ள தேனைக்குடிக்கையில் அந்தப் புஷ்பங்கள் வாடிப் போவதில்லை. எப்போதும் போலவே குளிர்ந்தமணம் வீசிக்கொண்டிருக்கும். ஆனால், மெய்யானபக்தி இதிலும் உத்தமமானவிதமாய் அவரவர்அந்தஸ்துக்கும், அலுவலுக்கும் ஒரு நஷ்டமும் வருவியாமல் அவைகளை அர்ச்சித்துச் சீர்ப்படுத்தி விளங்கச்செய்கின்றது. நவரத்தினங்களைத் தேனிற்போட்டால் அதனால் அவைகளின் நிறம் அதிக காந்தியோடு பிரகாசிக்கும். இத்தன்மையாகவே மெய்யானபக்தியைத் தேடி நடப்பவன் தன்தன் அந்தஸ்தில் அதிக நேர்த்தியானவனாய்க் காணப்படுவான். அதனால் குடும்பத்தில் நல்ல சமாதானமும், புருஷன் பெண்சாதிகளுள் உண்மையான நேசமும், அரசன்மட்டில் குடிகளுக்குப் பிரமாணிக்கமான கீழ்ப்படிதலும் உண்டாக, எவ்விதபிரயாசை, தொழிலும் அதிகஎளிதாய்ப் பிரியத்துக்குரியதாகும். போர்வீரர், பலவகைத்தொழிலாளர், இல்லறத்தோர், அரசர்கள் தங்கள்அந்தஸ்தில் இருந்துகொண்டே மெய்யானபக்திஅடையக் கூடாதென்பது அபத்தமும், பதிதபோதனையுமாம்.

3. மெய்யாகவே பிரியசகோதரமே! யோகிகள், முனிவர்கள் முதலிய சந்நியாசிகளுக்குரிய பக்தியானது எவ்வகை அந்தஸ்தினராலும் அனுசரிக்கக் கூடாதென்பது உண்மை. இந்த மூவித பக்தியுமில்லாமல் உலகத்திற் சீவிப்பவர்களை அர்ச்சிக்க மிகவுந்தகுதியான இன்னும் பலவித பக்திகள்உண்டு. ஆபிராகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, யோபு, சாராள், ரெபெக்கா, யூதித்தம்மாள் ஆகியஇவர்களெல்லோரும் தங்கள் அந்தஸ்தின் பிரகாரம் பக்தியுள்ளவர்களாயிருக்கப்பழையஏற்பாட்டிற் கண்டுவருகிறோம். புதியஏற்பாட்டிலோ கணக்கில்லாத அத்தாட்சிகள்உண்டு. அர்ச். சூசையப்பரும், லீதியா என்பவளும், கிரேப்பின் என்பவரும் தங்கள் பட்டடையில் வேலைசெய்துகொண்டேவெகுபக்தியுள்ளவர்களானார்கள். அர்ச். அன்னம்மாளும், மார்த்தம்மாளும், மொனிக்கம்மாளும் தங்கள் குடும்பத்தைப் பராமரித்துக்கொண்டு வெகு பத்தியுள்ளவர்களானார்கள். படையிற் சேவித்துக்கொண்டிருந்த கோர்னேலியுஸ்என்பவரும், அர்ச். மோரீஸ் என்பவரும் வெகுபக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். கொன்ஸ்தாந்தீன் என்ற சக்கரவர்த்தியும், அர்ச். எலேனம்மாளும், அர்ச். லூயிஸ்இராசாவும், முத்திப்பேறுபெற்ற அமதேஎன்பவரும், அர்ச். எட்வாட்அரசரும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவரின்

# தபசுகால ஆயர் நிருபம்

கிறீஸ்துநாதரில் அன்பார்ந்த சகோதரரே! பிள்ளைகளே!!

"சிறுவர்களைச் சும்மா விடுங்கள். அவர்கள் நம்மிடத்தில்வரத் தடை செய்யாதேயுங்கள். ஏனெனில், மோட்சஇராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது" (மத்தேயு 19/14) தமதுஅப்போஸ்தலர்களுக்கு யேசுநாதர் சொல்லியவார்த்தைகள் இவைகளே. அவர் சிறுவர்களைநேசித்தார். அவர்களோடிருக்க விரும்பினார். அவர்களுடைய மாசற்ற இருதயங்களின் அழகும், அவர்கள் நேரே சிருஷ்டிகரின்கையிலிருந்து நவமாய்த் தோன்றியதும், உலகத்தால் இன்னும் அசுசிப்படாமலும், சிருஷ்டிகரது சாயலும்வடிவும் கன்மபாவத்தால் மாசடையாமலும் இருப்பதாற்றான் அவர் அவர்களால் மிகுதியும் கவரப்பட்டார். அவர்கள்மத்தியிலிருக்க விரும்பினார். பிள்ளையின்மனம் எதையும்ஏற்கும். அதன்இருதயத்தில் எதுவும்பதியும். இளம்உள்ளம் எவ்வளவுக்குஅருட்டி எழுப்பப்படக்கூடுமோ அவ்வளவாகத் தாழ்த்தப்படுதலும் கூடும். ஒருபிள்ளையின் இருதயத்தில் நன்மையும், பரிசுத்தமுமானதை எவ்வளவுக்கு உருவாக்கலாமோ அவ்வளவுக்குத் தின்மையும், இழிவுமானதைப் பற்றச்செய்யலாம். ஒருகுழந்தையை ஒரு இளமரக்கன்றுபோல மோட்சத்தைநோக்கி நேராய் வளரச்செய்யலாம். அல்லது வளைத்து ஒருபோதுந் திருப்திகொடுக்காத உலகத்தைநோக்கித் தாழச்செய்யலாம். ஒருஆளின் சீவியத்தில் குழந்தைப்பருவமே முக்கியமானது. அதில் ஒருவரதுசீவியத்தின் எதிர்காலம்மாத்திரமல்ல, வரஇருக்கும் நித்தியகதியின்நியமமும் தங்கியிருக்கின்றது. இதுபற்றித்தான் கிறீஸ்துநாதரின்இருதயம் சிறுவர்கள் மட்டில் அன்பும்அனுதாபமும் கொண்டிருந்தது. அவர்களுடன் இருக்க ஆசித்ததும் இதற்காகத்தான்.

கிறீஸ்துநாதரில்சீவித்து அவரால் படிப்பிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு வருகின்ற திருச்சபையும், பிள்ளைகளில் விசேஷஅன்புவைத்து அவர்கள் தன்னைச்சூழ்ந்திருக்க ஆசிக்கின்றது. தனது தெய்வீக உபாத்தியாயரைப்போலவே திருச்சபையும் பெற்றோரையும், அரசினரையும்பார்த்து: "சிறுவர்களைச் சும்மாவிடுங்கள். அவர்கள் நம்மிடத்தில்வரத் தடை செய்யாதேயுங்கள்" என்று சொல்லுகின்றது. தனதுமக்களுக்குக் கத்தோலிக்ககல்வி பயிற்றும் உரிமையை எக்காலத்திலும் ஆறிக்கையிட்டு அத்தெய்வீக உரிமையைத் தனதுசக்திக்குத்தக்கது தளரவிடாது காப்பாற்றுகின்றது. திருச்சபை பலவற்றைப் பரித்தியாகஞ் செய்யும். ஆனால், பிள்ளைகளையோ ஒருபோதும் பரித்தியாகஞ் செய்யவே மாட்டாது. ஆகையால், கிறீஸ்துநாதரில் அன்பான சகோதரரே! பிள்ளைகளே! நாம் இந்தத்தபசுகால ஆயர்நிருபத்தில் கத்தோலிக்க கல்விபயிற்றல்என்னும் அதிமுக்கியவிஷயத்தை எடுத்தாளவிரும்புகின்றோம்.

### மூலாதார சத்தியங்கள்

கல்விபயிற்றலில் கத்தோலிக்கதிருச்சபையின் போதனைகளை ஆராய்ந்தறியுமுன் இயற்கைஅறிவின் வெளிச்சத்தாலும், கிறீஸ்தவவெளிப்படுத்தலாலும் சிலமூலாதாரஉண்மைகளை மனக்கண்முன் கொண்டுவருவது அவசியமாகும். அவ்வுண்மைகள்தான் முக்கியமான விஷயங்கள்யாவற்றிற்கும் விடையளிக்கும். மனுஷன் எனப்படுபவன் யார்? அவன் ஏன் உண்டாக்கப்பட்டான்? என்னும்காத்திரமான வினாக்களின் விடைகள் மனிதனின் பலவேறுபட்ட நிலைமைகளை ஆராய்ந்தறிதலில்தான் தங்கியிருக்கின்றது. அவற்றில் அதிகாத்திரமானது பிள்ளைகளின்கல்வியேயாகும்.

மனுஷன் எனப்படுபவன் யார்? என்னும்கேள்விக்கு இயற்கைநியாயத்தால் மதளியப்பட்டுத் தேவவெளிப்படுத்தலால் உறுதிப்படுத்தப்பட்ட விடையாதெனில், அவன் அரூபியும், அழியாத்தன்மையுமுள்ள ஆத்துமமும், சடப்பொருளாலான சரீரமும் உள்ள ஒருசிருட்டியே என்பதாகும். புத்தியும் சுயாதீனசித்தமும்கொண்ட ஆத்துமமானது மிகுதியும் தேவனுடைய சாயலைக் கொண்டிருப்பதால் இவ்வுலக சிருட்டிகள்யாவற்றிலும் மேம்பட்டதாயிருக்கின்றது. மனுஷன் என்பவன் யார்? என்பதை இன்னும்ஆராய்ந்தால், அவன் ஒருசாகிய வாழ்க்கையுடையவனென்பது பெறப்படும். மனுஷன் தன்னிலேதானே முழுதும்தங்கியிருக்க இயலாதவனாகையால் மற்றவர்களிலும் தங்கியிருக்கிறான். அதனால் ஒவ்வொரு க்ஷணமும் தனது இருக்கைக்கும், தனது ஒவ்வொருசுவாசிப்புக்கும், தனதுஇருதயத்துடிப்பு ஒவ்வொன்றிற்கும் கடவுளிலும், சீவியதேவைகளாகிய உணவு, உடை, கல்வி, பாதுகாப்பு இவற்றிற்கு ஏனையமனுஷரிலும் தங்கியிருக்கிறான் என்பது வெளிப்படை.

கடவுள் மனுஷனை ஏன் உண்டாக்கினார்? என்றவினாவுக்கு, தம்மைஅறிந்து நேசித்துச்சேவிக்கவும், அதனால் வரப்போகும்சீவியத்தில் நித்தியமாய் அவருடன் ஒன்றித்திருக்கவுமே படைக்கப்பட்டான்என்று இயற்கையறிவும், தெய்வீக வெளிப்படுத்தலும் விடையளிக்கும். மனுஷன் தன்சொந்தப் புத்தியால் கடவுளை அறிவதுபோல் அறியாது, தேவன் தாமாயிருக்கும் தன்மையிலும் அவரை அறியவும், நேசிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறான். தெய்வீகஞானம் மாத்திரமே அறியக்கூடியதை மனிதனுக்கு அறிவித்ததுமாத்திரமல்ல, தமதுசுபாவத்திலேயும் பங்குபற்றச் செய்திருக்கிறார். இந்த அதிசயமான இஷ்டப்பிரசாதத்தை நமதுஆதிப்பெற்றோர் இழந்தமையால் மனுஷரை இரட்சிக்க மனுவுருவெடுத்த அர்ச். தமதிரித்துவத்தின் இரண்டாமாளாகிய யேசுக்கிறீஸ்துநாதர்வழியாக அவ்வரப்பிரசாதம் இப்போது எங்களுக்குக் கிடைக்கிறது. இந்தஇஷ்டப்பிரசாத சீவியத்தில் மனிதன், யேசுக்கிறீஸ்துநாதர் தம்மைப் பற்றி வெளிப்படுத்தியவைகளைக் கொண்டு விசுவாசத்தின்மூலம் அவரை அறிகிறான். கிறீஸ்துநாதர்மூலம் கிடைக்கின்ற சுபாவத்துக்குமேலான அன்பினால் அவரை நேசிக்கின்றான். கிறீஸ்துநாதரால் தெரிவிக்கப்பட்ட அவரது தெய்வீகசித்தத்தை நிறைவேற்றுவதினால் அவருக்கு ஊழியஞ் செய்கிறான். இவ்வரப்பிரசாதத்தில், அறிவில், அன்பில், ஊழியத்தில் தனது சீவியம்முழுவதும் நிலைத்துநின்றால் மறுமைச்சீவியத்தில் வாக்குக் கெட்டாத ஒன்றிப்போடு தேவனை முகமுகமாய்த் தரிசிக்கவும், நித்தியமாய்நேசிக்கவும் பாக்கியம்பெறுவான். இதற்காகவே கடவுள் மனுஷனைப்படைத்தார். இதுவே அவனதுசீவியத்தின் முக்கிய அலுவல். ஒருவன் மற்றெல்லாவற்றிலும் பிரதிகூலப்பட்டும் இதொன்றில் மாத்திரம் அனுகூலப்பட்டானானால் அவனதுசீவியம் அனுகூலமானதொன்றாகும். மற்றெல்லாவற்றிலும் அனுகூலப்பட்டும் இதொன்றில்மாத்திரம் பிரதிகூலமடைவானானால் அவனது சீவியம்முற்றுமே பிரதிகூலமானதாகும். ஆகையால், வாழ்க்கையின் ஏகநோக்கம்நிறைவுறப் பிள்ளைகளைப்படிப்பிப்பதும், பயிற்றுவதுமே கல்வியின் முக்கியநோக்கமென்று நாம்இப்போது கூறலாம்.

நாம்ஆராய்ந்து தெளிந்துகொண்ட ஆதாரஉண்மைகளிலிருந்து மனுஷன் தனதுஆத்துமத்தை இரட்சித்தலாகிய முக்கியஅலுவலைத்தவிர வேறுபல உத்தரவாதங்களுமுடையவனுயிருக்கிறானென்று விளங்கக் கிடக்கின்றது. அவன் இந்தஉலகத்திலிருக்குமளவாகச் சடப்பொருளுடன் ஒன்றித்திருக்கும்ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டியவனுகின்றான். இன்னும் மானதசம்பந்தமாயும், தேகசம்பந்தமாயும் தன்னைத் தயார்செய்து தனதுவாழ்க்கைக்கு உழைக்கவேண்டியவனுயிருக்கிறான். அவன் சாகியவாழ்க்கையுடையவனாதலின் பிறருடன்புழங்குவதற்கும் தன்னைத் தயார்செய்யவேண்டும். இவைகள்யாவும் ஆத்துமத்தை இரட்சித்தலாகிய முக்கியஅலுவலுக்குக் கீழ்த்தரமானவைகளாயினும் வேண்டியவைகளே!

(தொடரும்)

---

கச்சதீவு

## அர்ச். அந்தோனியார் திருநாள்

## 15-3-53

**யாத்திரிகர்கட்கு ஓர் அறிவித்தல்:—**

1. இத்திருநாள் பங்குனிமாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திவ்விய பாடற்பூசையுடன் முடிவுபெறும்.
2. பங்குனிமாதம் 10-ந் திகதி நெடுந்தீவு, மணல்த்துறையிலிருந்து தண்ணீர்ஏற்றப்பட்டுப் 11-ந் திகதிகாலை நெடுந்தீவுமேற்குப் பெரிய துறையிலிருந்து வத்தைகள் பிரயாணப்படும்.
3. யாத்திரிகர்கள் தங்களுக்குவேண்டிய தண்ணீர், உணவுப்பொருட்கள் என்பனவற்றைக் குறித்தநாளில் ஏற்றிக்கொள்ளல்வேண்டும்.
4. பிறவூர் யாத்திரிகர்கட்கு வசதியளிப்பதற்காகப் 12-ந் திகதி வியாழக்கிழமைகாலை 10 மணியளவில் நெடுந்தீவு மாவிலித் துறையிலிருந்து மோட்டர்லோஞ்சு ஓடவிடப்படும்.
5. யாத்திரிகர்களின் ஞானக்கடமைகளையிட்டுப் பலகுருப்பிரசாதிகள் யாத்திரைஸ்தலத்தில் சமுகமாயிருப்பார்கள்.
6. பங்குனிமாதம் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை சாயந்தரம் திருப்பாதைச் சுற்றுப்பிரகாரமும், திருமணித்தியாலமும் நடைபெறும்.

எஸ். ஏ. சுவாம்பிள்ளை
பங்குக்குருவானவர்

---

## ஸ்ரீமதி ரேசம்மா இராசரத்தினத்தின்

# தேகவியோகம்

சூராவத்தையிலே ஓர் வேதவைராவியாய், தேவபக்தியிற் சிறந்தவளாய், ஊரவரால் வெகுவாக நன்குமதிக்கப்பெற்றவளாய், ஆருக்கும் தனதுநன்மதியால் ஆறுதலளித்து, ஊருக்கோர் நன்முன்மாதிரிகையாய் வாழ்ந்திருந்த ஸ்ரீமதி ரேசம்மா இராசரத்தினம் தன்னைப்பீடித்திருந்த இரத்தக்கொதிப்பு நோயால்வருந்தி அந்தியவேளை அவஸ்தைபூசுதல்பெற்றுக் கடந்த 17-2-53 செவ்வாய்க்கிழமை அதிகாலை மரணத்திரையில் மறையலாயினள். மரிக்கும்போது இவவுக்குவயது 51.

இவ சூராவத்தையிலே உயர் வேளாண்மரபில் பிறந்தவ. சிங்கப்பூரில் பலவருடங்களாகப் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியராயிருந்து இளைப்பாறிய திரு. பொ. இராசரத்தினம் இவவுடையபத்தா. கொழும்பு ஓடிற் ஆபீசில் கடமையாற்றும் திரு. ஜி. எவ். இராசரத்தினம் இவவின் ஏகபுதல்வர். மலாயாக்கனேசியன் கன்னியர் மடத்தில் கன்னியாஸ்திரியாக இருக்கின்ற சிஸ்றர் திரேசா ஏகபுதல்வியாவர். ஆசிரியைகள் ஸ்ரீமதி கிறிஸ்ரீன்சைமன், ஸ்ரீமதி ஆரோக்கியம் யோண்பிள்ளை, ஸ்ரீமதி மாகிறெற் குணமணி தேவசகாயம் இவவுக்கு உடன்பிறந்த சகோதரிகளாவர்.

இவ சிலவருடங்களாக ஏழாலைக் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியையாக இருந்துவந்தா. விவாகமாகியபின் தனதுபத்தாவுடன் சிங்கப்பூரிற் பலவருடங்களாக வசித்துவந்தா. அங்கும் தனது சிறந்ததெய்வபக்தியைப் பிரத்தியட்சமாய்க்காண்பித்துத் தனது ஏக புத்திரியைக்கனேசியன்கன்னியர்மடத்தில் ஓர் கன்னியாஸ்திரியாகக்காணும் பாக்கியத்தைப்பெற்றா. பின்னர் தனது பத்தாவுடன் சூராவத்தைக்குவந்து பல வேததொண்டுகளில் ஈடுபட்டுவந்தா. சூராவத்தையில் ஓர் கோவில் அமைப்பதற்குக் காணி இலவசமாய்க்கொடுத்து அதில் அர்ச். திரேசம்மாள்பேரால் ஓர் கோவிலுக்கு இடம்வகுத்து அதன் அஸ்திவாரவேலையை ஊரவரின் பண உதவியைப்பெற்றுச் செய்துமுடித்தா. இன்னும் அஸ்திவாரத்தின்நடுவில் தற்காலிகமாக நிறுவப்பெற்ற செபகூடத்திற் தினமும்செபமாலை, வணக்கமாதம், சிலுவைப்பாதைஆகியவற்றைத் தானே உடன்நின்று நடத்திவந்தா. இவவுடையவாழ்வில் இவவுக்கிருந்த வேகமானஆசைகள் இரண்டு. ஒன்று, தனது பிள்ளைகளுள் ஒருவரையாவது துறவறஅந்தஸ்திற் காணவேண்டுமென்பது. மற்றது, சூராவத்தையில் ஓர் கோவில் வரவேண்டுமென்பது. இவ்விரண்டும் ஓரளவில் நிறைவேறத் தேவன்திருவுளமானார்.

மரியாயின் சேனைத்தலைவியாயிருந்து உத்தமஊழியஞ்செய்து, ஞானகாரியங்களில் கட்டளைச்சுவாமிமாருக்குப் பக்கபலமாய் நின்றுழைத்தா. தருமசிமாட்டிகள்சபையை அணிவகுத்து நடத்துவதில் மிகஉதவியாயிருந்தா. சிறுவர்சிறுமிகளை ஓய்வுநேரங்களிற் தனது வீட்டில் அழைத்துவந்து ஞானோபதேசஞ் சொல்லிக்கொடுப்பது இவவுடையவழக்கம்.

அடுத்தநாட்காலை இவவின் உடல் அழகியபேழையில்வைத்து, இனசனர், அயலவர் பிரார்த்தனையுடன்முன் செல்ல, வெண்பரிபூட்டிய இரதத்தில் அர்ச். இசிதோர்கோவில்கொண்டு சென்று அங்கு அமைக்கப்பெற்ற மேடையில் ஸ்தாபிக்கப்படவே, வண. கட்டளைச்சுவாமியார் உடனிருப்ப, வண. வில்லவராசிங்கம் சுவாமியவர்களாற் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. அதனைத் தொடர்ந்து அந்திமதிருச்சடங்குகள் பூர்த்தியானதும் குருவர்கள் இருவரும் துக்கசங்கீதம்பாடப் பிரார்த்தனைவரிசைக் கிரமங்களுடன் பேழையானது சேமக்காலைகொண்டு சென்று பூமதானஞ்செய்யப்பெற்றது. இவவை இழந்து பரதவிக்கும் கணவர் பிள்ளைகள் தாய்சகோதரிகளுடன் நானும் அனுதாபப்படுகின்றேன்.

**R. I. P.**

—நிருபர்

# கத்தோலிக்க சமாச்சாரம்

## சீனதேசமும் சீனக்குருமாரும்

500 சீனக் குருமார்வரையில் மறைவாகவும், சாதாரணஉடை தரித்தும் கடூர வேதகலாபனை நடந்துகொண்டுவரும் சீனவின் பகுதிகளில் வேத விசுவாசம் குன்றாது அதைக் காப்பாற்றி வருகின்றனர் என்றும், வேறு 2,000 சீனக்குருமார் தங்கள் ஸ்தானங்களிலே பிரசித்தமாகத் தொண்டாற்றிவருகிறார்கள் என்றும் செய்திகிடைத்திருக்கிறது. தாங்கள்போடும தாளத்துக்கெல்லாம் நின்றாடவல்ல ஓர் "சுதந்திர கிறீஸ்த சபை"யை 77 சீனமேற்றிராசனங்களிலும் ஸ்தாபித்து விடுமாறு சீனக்கம்யூனிஸ்த அராசாங்கம் எடுத்தஎடுப்புப் பலன் அளிக்கவில்லை. சுதந்திர கிறீஸ்தவர்கள் சபை என்பதே அங்குஇல்லை. ஏறக்குறைய 115 சீனக் குருமார் கொலைத்தண்டனைக் குள்ளாகியும், சிறைச்சாலைகளில் மரணமடைந்தும் இருக்கின்றனர். 200 சீனக்குருமாருக்குமேல் சிறைவைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

## மூன்றாம் நூற்றாண்டுப் பிரதிமை

அர்ச். பேதுருவானவரின் மூன்றாம்நூற்றாண்டுப் பிரதிமையும், தமக்குச்சமீபமாக அடக்கஞ் செய்யப் பட்டிருப்பவர்களாக மன்றாடும்படியாய் அவரைக்கேட்கும் கல்வெட்டு ஒன்றும் அர்ச். பேதுருவானவர் மகாலய நிலவறையிலே அவருடையகல்லறைக்குச் சமீபமாக ரோமைச் சர்வகலா சாலையைச் சேர்ந்த டக்றர் மார்கறிற் காந்டுக்கி எனும் பேராசிரியையால் கண்டறியப்பட்டிருக்கிறது. அம்மகாலயம் தற்போதுநிறுவிநிற்கின்ற அதேயிடத்திற்தானே அர்ச். பேதுருவானவர் அடக்கம்பண்ணப் பெற்றாரென்பதை இதுமேலும் அத்தாட்சிப்படுத்துகின்றது. அப்பிரதிமைப் படத்திலே அர்ச். பேதுருவானவர் ஓர் விருத்தாப்பியராகக் காட்சியளிக்கிறார். அதற்குப்பக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் "பேதுருவானவரே! உமதுதிருமேனிக்குச் சமீபமாக அடக்கஞ் செய்யப்பட்டுள்ள பரிசுத்தகிறீஸ்தவர்களுக்காக மன்றாடிக்கொள்ளும்" என்னும் செபம் காணப்படுகின்றது. வத்திக்கானில் நடந்தேறிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூட்டம்ஒன்றில முன் சொன்ன பேராசிரியை இவைகளை எடுத்துக்கூறியிருக்கிறாள்.

## கம்யூனிஸ்த சங்காரம்

ருஷியர்களால் அடிப்படுத்தப்பட்ட போலிஷ் பிரதேசமாகிய உக்றேயின்நாட்டிலே இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமான 1939-ம் ஆண்டுமுதல் கம்யூனிஸ்தர்கள் செய்துள்ள அட்டூழியங்களைப்பற்றித் தேசாந்திரிகளான அந்நாட்டுக் கத்தோலிக்கர் பின்வருமாறு எடுத்துக்கூறுகிறார்கள். ஐந்து மேற்றிராசனங்களும், இரண்டுஅப்போஸ்தலிக்க பரிபாலன ஸ்தானங்களும் நீக்கப்பட்டுள்ளன. 10 மேற்றிராணிமார் சிறைவைக்க, அல்லது கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். 3,500 குருமார் சிறைவைக்க, அன்றேல் நாடுகடத்தப்பட்டிருக்கிறார்கள். 1,100 கன்னியாஸ்திரீமார் தங்கள் சபைகளிலிருந்து கலைக்கப்பட்டிருக்கிறார்கள். 10,000 பாடசாலைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. 8,000 கோவில்களும், கத்தோலிக்க ஸ்தாபனங்களும் மூடவும், பறிமுதலாக்கவும் பட்டிருக்கின்றன. 540 குருமடங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. சகல கத்தோலிக்க ஸ்தாபனங்களும், பத்திரிகைகளும் ஒழிக்கப்பட்டிருக்கின்றன.

## தைரியத்தைப் பாராட்டுகின்றார்

மாஷல்ரிற்றோவினது கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் இருந்துவருவதும், வேதகலாபனை நடந்துகொண்டு வருவதுமான யூகோசிலேவியநாட்டிலே துன்புறுத்தப்படுகின்றகத்தோலிக்க குருமாரும், சாதாரணகத்தோலிக்கரும் காட்டிவருகின்ற தைரியத்தை அதென்ஸ் நகரிலுள்ள கிரேக்க பிரிவினைச் சபையின் தலைவரான ஸ்பைறிடன் அதிமேற்றிராணியார் சமீபத்திலே புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். சமயத்தைக் கம்யூனிஸ்தர்கள் தாக்குவதானது, கிரேக்க பிரிவினைச்சபையார் உட்படச் சகல கிறீஸ்தவர்களையுமே எதிர்த்து நடத்தும் ஓர் ஆக்கிரமிப்பாகும்; கிறீஸ்நாட்டில் அப்போதுநடந்த கம்யூனிஸ்தரின் கொறில்லாயுத்தத்தில் 225 பிரிவினைச்சபைக் குருமார் கொல்லப்பட்டனர்; 2,000 கோவில்கள் நிர்மூலமாக்கப்பட்டன; ஈறாந்தயுத்தத்தில் வேறும் 95 குருமார் கொல்லப்பட்டனரென அவர் தெரிவித்திருக்கின்றார்.

## எம்மாவுஸ் நகர கோவில்

நமதுதிவ்விய இரட்சகர் உத்தானமானபின் இருசீஷர்களுக்குத் தம்மைத்தாமே வெளிப்படுத்தியதன் ஞாபகார்த்தமாக எம்மாவுஸ்நகரில் இருந்துவருகின்ற சரித்திரப் பிரசித்திபெற்ற கோவில் கட்டியெழுப்பப்பட்ட 50-ம் ஆண்டுவிழா சமீபத்தில் நடந்தேறியது. எம்மாவுஸ் நகர் ஜெருசலேம் நகரிலிருந்து எட்டுமைல்தூரத்திலுள்ளது. இந்தக்கோவில் இருக்கும் இடத்தில்தான் அர்ச். யூதாததேயு, அர்ச். சிமியோன் என்பவர்களின் தந்தையரான அர்ச். கிளேயோப்பாஸின் மனை இருந்தது. இந்தஇடம் பவுலின்தே நிக்கொலே எனும் பிரான்சியபேரான சீமாட்டியால் 1859-ம் ஆண்டு விலைகொடுத்து வாங்கித் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டது. இந்தச்சீமாட்டி அக்கோவிலிலேயே அடக்கஞ்செய்யப்பட்டிருக்கின்றாள். நமது திவ்வியகத்தர் இரு சீஷர்களுக்கும் தம்மை வெளிப்படுத்திய சம்பவம் லூக்காசுவிசேஷம் 24-ம் அதிகாரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

## மகாவந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின்

# தபசுகால நிருபம்

(முன்தொடர்ச்சி)

### நிந்தைப்பரிகார நாள்
### பங்குனி மாதம் 6-ம்தேதி முதல் வெள்ளிக்கிழமை.

பொதுஉடைமைக்கட்சி செய்யும் அட்டூழியங்களை எல்லாம் எடுத்துரைத்தால் கண்கலங்கும், நெஞ்சம்பதைக்கும், இருதயம் துடிக்கும். இன்று ருஷியா, சீனா, திபேத்,மத்தியஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, இது போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அகில உலகத்தின் ஐந்தில் ஒருபாக நிலப்பரப்பும், மூன்றில் ஒருபாக மானிடவர்க்கமும் பொதுஉடைமையின் அடிமைத்தனத்தில் இருக்கிறதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இப்படித்துன்புறுகிற கத்தோலிக்கரின்தொகை அறுபதுமில்லியன், அதாவது ஆறு கோடிபேர்.

இவ்வுலகசரிதையில் எக்காலத்திலாவது இப்பேர்ப்பட்ட கண்றாவியைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. கத்தோலிக்க மேற்றிராணிமார், குருமார், விசுவாசிகள் அநேகர் அடிபட்டு, மிதிபட்டு, சிறைப்பட்டு, மானபங்கப்பட்டு, இரத்தஞ்சிந்தி வேதசாட்சிகளாகிறார்கள். உபாதைஅனுபவிக்கும் ஆறுகோடி கத்தோலிக்கரும் நமது நேசசகோதரர்கள். கிறீஸ்துநாதருடைய ஞானச்சரீரத்தின் அவயவங்கள். இவர்களுக்கு ஆறுதலும் தைரியமும் அளிக்கவும், யேசுவின் திருஇருதயம் அனுபவிக்கும் நிந்தைஅவமானங்களுக்குப் பரிகாரஞ்செய்யவுமாக அமெரிக்க கத்தோலிக்கர் அனைவரும்சேர்ந்து சென்றமார்கழிமாதம் செய்ததுபோல் நாமும் பங்குனிமாதம் 6-ம்தேதி எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டுமென்று நாம் வெகுவாய் ஆசிக்கிறோம். அந்தநாளில் கூடுமானவர்கள் எல்லோரும் ஒருசந்தி அனுசரிக்கக்கடவார்கள். அன்று ஒரு மணிநேரம் தேவநற்கருணை ஸ்தாபகம்செய்து செபமாலைசெபித்து நிந்தைப்பரிகாரமுயற்சி செய்யவேண்டுமென்பது நமதுவிருப்பம்.

### தபசுகாலம் அநுக்கிரகத்தின் காலம் இரட்சணியத்தின் நாட்கள்

நமது நாட்டிலும், நம்மேற்றிராசனத்திலும் தெய்வபயமற்று நரகபாதையில் நடப்பவர்கள் இல்லையா? விசுவாசத்தையிழந்து புறமதத்தைத் தழுவினவர்கள் இல்லையா? திருச்சபைச் சட்டத்தைமீறி றெஜிஸ்றர் கலியாணம்செய்தவர்கள் இல்லையா? கோவில்சொத்தை அபகரித்தவர்கள் இல்லையா? பிள்ளைகளைக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இதரபாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர் இல்லையா? புறத்தியாருடைய பேரையும்கீர்த்தியையும் வார்த்தையினாலும் எழுத்தினாலும் கெடுக்கிறவர்கள் இல்லையா? ஞாயிற்றுக்கிழமை பூசைகாணாத கெட்டகிறீஸ்துவர்கள் இல்லையா? இவர்கள் சொல்லுகிறதென்ன? நான் பாவஞ்செய்தேன்; எனக்கு என்னநேரிட்டது? எனக்கு என்னகுறைவு? இந்தஆட்டபாட்டங்கள், இந்தக் காமாதூரம், இந்தஇலச்சைக் கேடுகள் எத்தனை நாளைக்கு? தொடக்கியிருக்கிற இந்தவருடத்தின் முடிவைக்காணப்போகிறாயா? சாவு இன்றைக்கோ நாளைக்கோ உன் தலைமேலிருக்கிறதை அறியாயோ? சாவானபாவத்தோடிருக்கிறபாவியே! நீ இன்று செத்தால் உன்னுடையகதி என்னமாய்ப்போகுமென்று யோசித்து "சபிக்கப்பட்டவனே, என்னைவிட்டுஅகன்று பசாசுக்கும் அதன் தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்தியஅக்கினிக்குப் போ" என்று கோடையிடி முழங்கினாற்போல உன்னைச் சபித்தால் ஐயோ, என்னபரிதாபம்! என்ன நிர்ப்பாக்கியம் !!

யேசுவின் விலைமதிக்கப்படாத திருஇரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட என்மக்களே! இதோ தபசுகாலம் தொடங்கியிருக்கிறது. அநுக்கிரகத்தின்காலம், இரட்சணியத்தின் நாட்கள். இன்று ஆண்டவருடைய குரற்சத்தத்தைக்கேட்டால் உங்கள் இருதயங்களைக் கடினமாக்காதேயுங்கள். இப்பொழுதே உபவாசத்தாலும், பிரலாபத்தாலும் உங்கள் முழுஇருதயத்தோடும் நம்மிடம் திரும்பிவாருங்கள் என்கிறார்ஆண்டவர். உங்கள்வஸ்திரங்களை அல்ல, உங்கள் இருதயங்களைக்கிழித்து உங்கள் ஆண்டவராகிய தேவனிடம் திரும்புங்கள். ஏனெனில் அவர் நல்லவர், இரக்கமுள்ளவர், பொறுமையுள்ளவர், மிகுந்த தயையுடையவர். தீமைமீது பச்சாத்தாபம்கொள்பவர். மேலும் பெற்றதாய் மறந்தாலும் நமது தேவதாய் மறப்பாளா! யேசுவின்தாய் நம்முடைய நேசத்தாய். பாவிகளுக்குஅடைக்கலம். சதாசகாயமாதா. செபமாலை இராக்கினி. அவளை நம்பினவர்கள் ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள். ஆகவே, எப்பேர்ப்பட்ட பெரியபாவியாய் நீ இருந்தாலும், நம்பிக்கையுடன் அந்தத்தாயிடம்போ. அவள் மடியிலே போய்விழு. அம்மா, உன்னுடைய இருதயத்தையும், உன்நேசகுமாரனுடைய இருதயத்தையும் பாவவாளால் குத்தினபாவிநான்; எனக்காக உன்திருக்குமாரனிடத்தில் பரிந்துபேசுவாயாக.

அன்பார்ந்த பிள்ளைகளே! இந்தத்தபசுகாலத்தில் நல்ல பாவசங்கீர்த்தனம்செய்து, திவ்வியநன்மைவாங்கி, இனிமேலாக உங்கள் கெட்டசகவாசங்களையெல்லாம் அறவேஒழித்து அர்ச்சியசிஷ்டசீவியம் சீவிப்போமென்று கெட்டியான பிரதிக்கினை செய்யுங்கள். இந்தப்பிரதிக்கினையில் கடைசிமட்டும் பிரமாணிக்கமாய்இருக்க யேசுவின் திருஇருதயமும், மரியாயின் மாசற்றஇருதயமும், நல்லதகப்பன் அர்ச். சூசையப்பரும் உதவி புரிவார்களாக.

## பங்குனிமாதம்

### செப அப்போஸ்தல சபை

போதுக்கருத்து:- பரிசுத்தபிதாவின் பொதுக் கருத்துக்காகவும், விசேஷ கருத்துக்காகவும் வேண்டிக்கொள்ளுதல்.

மிஷன் கருத்து:- தென்கிழக்கு ஆசியா கம்யூனிஸ்த அபாயத்திலிருந்து விடுவிக்கப்படுமாறு மன்றாடிக் கொள்ளுதல்.

## திருநாள் அட்டவணை

### பங்குனிமாதம் — 1953

| | | |
|---|---|---|
| வெ | 6 | அ. பெர்பேர்த்தம்மாள், வே. (சி) |
| சனி | 7 | அ. அக்குயினு தோமையார், கு. வேதபா. (வெ) |
| ஞா | 8 | தபசுகால 3-ம் ஞாயிறு — அ. தேவ அருளப்பர், ம. (ஊ) |
| திங் | 9 | அ. பிரான்சிஸ்கம்மாள், வி. (வெ) |
| செ | 10 | அ. 40 வேதசாட்சிகள் (சி) |
| புத | 11 | அ. எயுலோஜியார், கு. வே. (ஊ) |
| வி | 12 | அ. மகா கிறகோரியார், பா. வேதபா. (வெ) |

சத்தியவேத

பாதுகாவலன்

1953-ம் ஆண்டு

பங்குனி மாதம் 5-ந் திகதி

## பாப்பரசர் சுபதினம்

கிறீஸ்துநாதரின் பதிலாளியாய், கத்தோலிக்க திருச்சபையின் பிரத்தியட்சதலைவராய், அர்ச். பேதுருவானவரைத் தொடர்ந்துவந்த 262-வது பாப்பானவராய், சாதிபேதம், தேசபேதம், சாகியபேதமில்லாது உலகின் எண்டிசாமுகமுமே பரந்துவாழும் நாற்பதுகோடிக்கு மேற்பட்ட கத்தோலிக்க நன்மக்களின் ஆத்மீகதலைவராய்விளங்கும் பரிசுத்தபிதா பன்னிரண்டாம் பத்திநாதபாப்பரசரின் சுபதினம் இம்மாதம் 8-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. உலகில் மற்றெந்தச் சமயங்களுக்குமில்லாததாய்க்கத்தோலிக்க சற்சமயத்துக்கேயுரிய தனிப்பெருமைகளில் ஒன்று, அதற்கோர் தனிப்பெருந் தலைவர் இருப்பதேயாகும். தமக்குரிய வழுவாவரத்தோடும் அரசியல் ஞானத்தோடும், ஆழ்ந்தவேதவைராக்கியத்தோடும் கடந்த பதினன்கு வருடங்களாகப் பெரும்பிரஸ்தாபத்துடன் திருச்சபையைஆண்டுவருகிறார் 12-ம்பத்திநாத பாப்பரசர். திருச்சபைச்சரித்திரத்திலே, முன்னர் எக்காலத்திலும் இல்லாதவகையிலே, கிறீஸ்தவ வாழ்க்கையையும், கிறீஸ்தவ செல்வாக்கையும், கிறீஸ்தசமய வழிபாட்டையும்எதிர்த்துச் சண்டப்பிரசண்ட மாருதவேகத்துடன் இன்றையஉலகில் அந்தகாரத்தின் நாஸ்திக சமதர்ம பலங்கள் நடாத்திவரும் மாபெருந் தாக்குதல்களையெல்லாம் மகாஉத்தண்ட காம்பீரத்துடனும், மலைபோலும் நிலையே கலங்காத மனோவலிமையுடனும் எதிர்நோக்கிநின்று இணையற்ற வீரபிரதாபம் எய்திவருகின்றார் எமது பத்திநாதபாப்பரசர். மனிதவர்க்கத்தின் சரித்திரத்திலே அசம்பவிதமான பெரும் பயங்கரத்துக்குரிய ஆபத்தை எதிர்நோக்கி உலகமுழுவதும் நடுங்கிக்கொண்டிருக்க, அவரைத் தலைவராகக்கொண்ட திருச்சபையோ இன்று கலங்காது உறுதியாய் நிற்கின்றது. இந்தத்திகிலின்மத்தியிலே பாப்பரசானது, முன்னர் பன்முறைகளிலும் இருந்ததுபோலவே உலகிற்கு நம்பிக்கையளிக்கும் கலங்கரைச்சுடராய்ப் பிரபை காலித்துக்கொண்டிருக்கின்றது. பாப்பரசரிடம் சேனைபலம் உண்டா? ஆயுதபலமுண்டா? அவையின்றேல்பலமேது? என தங்கள் சுயபலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளஸ்ராலின் போன்ற மதியீனர்சிலர்கேட்கலாம். ஆம், அவரிடம் நாச அணுக்குண்டுப் பலமுமில்லை. நால்வகைச்சேனை பலமுமில்லை. ஆனல், அவற்றிலும் மகாப்பலம் பொருந்திய ஆத்மீகபலம் அவரிடமுண்டு. அஃதுஎத்தகைய லௌகீகபலத்துக்கும் அசையாதபலம். வைதீகபலம். இதுவரை அவர்விடுத்துள்ள சாதாரண நிருபங்களும், திருமுகங்களும், நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளும் அப்பலத்தை உலகறியப் பிரதிபலிப்பனவாகும். இத்தகைய மகிமை வாய்ந்த பாப்பரசர் ஒருவரை நாம்கொண்டிருப்பது நமக்குப் பெருமையாகும். அவர்மட்டிலே பக்தியும், வணக்கமும், அமைச்சலும் காண்பிப்பது அவரது ஞானமக்களாகிய நம்மேற் சுமந்த கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றி வைக்கப் பாப்பரசர் சுபதினம ஓர்நலல சந்தர்ப்பமாகும். அதனல் வழமைபோல அதனைக்கொண்டாடுவோம். இன்று சமதர்மத்தாலும், அதன்நாஸ்திக, லோகாயத பிரளயத்தாலும் கலங்கிக்கொண்டிருக்கும் உலகத்தை இரட்சணிய துறையில் வெற்றிகரமாக வழிநடத்துதற்குவேண்டிய திருவருட்பிரசாதங்களையெல்லாம் அவர்மேல் மழைபோல வருஷித்தருளுமாறு அமலனை இரந்துமன்றாடுவோம்.

### தபசுகாலத்தின்

## 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 11: 14—28)

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக்காலத்திலே யேசுநாதர் ஊமையாயிருந்த ஓர்பிசாசைத்துரத்தினர். பிசாசைத் துரத்தினவுடனே ஊமையன் பேசினன். சனங்கள் அதைப்பற்றி ஆச்சரியப் பட்டார்கள். அப்போதுஅவர்களிற் சிலர்: இவன் பேய்களின் தலையாகிய பேயேல்செபூபினல் பேய்களைத் துரத்துகிருன் என்றார்கள். வேறுசிலர் அவரைச் சோதிக்கத் தக்கதாக வானத்தினின்று ஓர்அதிசயத்தை அவரிடத்தில் கேட்டார்கள். ஆனல்,

### அர்ச். சவேரியாரின்

## வரப்பிரசாத நவநாள்

### பங்குனி 4—12

இந்த நவநாள் பத்திமுயற்சி நல்லூர் மீசாமைச்சேர்ந்த அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் கோவிலிலே 4-ந் திகதியாகிய நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப்பத்திமுயற்சி வழமைபோல வருகிற 12-ந்திகதி வியாழக்கிழமைசாயந்தரம் 4-30 மணிக்குத் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவாகும். 13-ந் திகதியன்று காலை 6-30 மணிக்குத் திருநாட் பூசை நடந்தேறும்.

அர்ச். சவேரியாரின் பக்தர்கள் யாழ்ப்பாணத்திலும், மற்றுமிடங்களிலுமிருந்து சென்றவருடங்களிற் போலத் தினமும் பெருந் திரளாகவந்து இந்தப் பெரிய வரப்பிரசாதநவநாள் பத்திமுயற்சியில் பங்குபற்றிப் பலனடைவார்களென நம்புகின்றேம்.

அவர்களுடைய நினைவுகளை அவர் கண்டமாத்திரத்தில், அவர்களை நோக்கிச் சொன்னதாவது: தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிநத எந்த இராச்சியமும் பாழாய்ப்போம்; வீடும் வீட்டின்மேல் விழும். ஆகையால, சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்துபோனல், அதன் இராச்சியம் நிலைநிற்ப தெப்படி? இப்படியிருக்க, நான் பேயேல்செபூபினல் பிசாசுகளை ஓட்டுகிறேனன்கிறீர்கள். நான் பேயேல் செபூபினல் பேய்களை ஓட்டினல், உங்கள்மக்கள் யாரைக்கொண்டு அவைகளை ஓட்டுகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களுக்கு நடுவர்களாயிருப்பார்கள். ஆனல், நான் சருவேசுரனுடைய விரலினலே பேய்களை ஓட்டுகிறேனகில் சருவேசுரனுடைய இராச்சியம் மெய்யாகவே உங்களிடத்தில் வந்திருக்கிறது. ஆயுதமணிந்த பலசாலி தன்மாளிகையைக் காக்கிறபோது, அவன் உடைமைகளெல்லாம் பத்திரமாயிருக்கின்றன. அவனிலும் அதிகபலவான் ஒருவன் சடுதியில் வந்து அவனைச் செயித்தாலோ, அவன் நம்பியிருந்த ஆயுதங்களையெல்லாம் பறித்துக்கொண்டு, அவன் கொள்ளைப் பொருளையும் பங்கிடுவான். என்னேடு இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறுன். என்னேடு சேர்ந்துகொள்ளாதவன் சிதறடிக்கிறுன். அசுத்த அரூபி ஒருமனிதனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் இளைப்பாற்றியைத் தேடித்திரிந்தும், கிடையாமல்: நான் விட்டுப் புறப்பட்ட என்வீட்டிற்குத் திரும்பிப் போவேனென்று சொல்லி, மறுபடிவந்து, அது துடைப்பத்தால் சுத்தமாக்கப்பட்டு, சோடிக்கப்பட்டிருக்கிறதைக்காண்கிறது. அப்பொழுது அதுபோய், தன்னிலும் அதிக பொல்லாத வேறு ஏழு அரூபிகளைத் தன்னேடு கூட்டிக்கொண்டுவந்து, உள்ளேபுகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது, அந்தமனிதனுடைய முந்தின ஸ்திதியிலும் பிந்தின ஸ்திதி அதிக கெடுதியாயிருக்கிறதென்று திருவுளம்பற்றினர். அவர் இவைகளை வசனிக்கையில் சம்பவித்த தேதெனில், சனக்கூட்டத்தில் நின்று ஓர்ஸ்திரீயானவள் தன்குரலை உயர்த்தி, அவரை நோக்கி: உம்மைச் சுமந்தஉதரமும் நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகளே என்றாள். அதற்கு அவர்: அப்படியானலும், சருவேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்டு அதை அநுசரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று திருவுளம்பற்றினர்.

## THE JAFFNA DIOCESAN UNION

An Executive Committee Meeting of the Jaffna Diocesan Union will be held on Sunday the 15th inst., at 10 a. m. at the Jaffna Catholic Club. All members are kindly requested to be present.

### AGENDA:

1. Consideration of a letter received from certain members concerning:—(a) The 25th Anniversary of the Inauguration of the Diocesan Provident Society Ltd. (b) Amendment of the Rules of the Provident Society Ltd. etc.
2. Consideration of a letter received from the Secretary Catholic Union of Ceylon: re Celebration of the Golden Jubilee of the C. U. of Ceylon.

## யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று நிகழும் பங்குனி மாதம் 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், கத்தோலிக்க கிளப்மண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். அதற்குச் சமூகமளிக்கும்படி அங்கத்தவர்கள்சகலரும் அன்பாகக் கேட்கப்படுகிறார்கள்.

### நிகழ்ச்சி நிரல்

1. (A) மேற்றிராசன சேமலாபசங்கம் ஆரம்பமான 25-ம் வருடநிறைவுவிழா சம்பந்தமாகவும்,

(B) சேமலாபசங்க பிரமாணங்களின் திருத்தசம்பந்தமாகவும் சிலஅங்கத்தவர்களிடமிருந்து கிடைத்த ஓர்கடிதம்பற்றி ஆலோசனைசெய்தல்

2. இலங்கைக் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் பொன்யூபிலி விழாக்கொண்டாட்டவிஷயமாய் இலங்கைக் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் காரியதரிசியிடமிருந்து கிடைத்துள்ளஓர்கடிதம் பற்றி ஆலோசனைசெய்தல்.

A. LAZARUS,
*Secretary*,
Jaffna Catholic Diocesan Union



சதா சகாய
மாதாவின்
கோணம்

## மாதாவின் சகாயத்தால்
### மரணவேளையில் மனந்திரும்பினர்

(முன்தொடர்ச்சி)

கல்லூரிக் குருவானவர் நோயாளியைத்தரிசிக்க அன்றுபின்னேரந்தான் போகக்கூடியதாக விருந்தது. அவ்வாறுபோய் அவருக்கு மரணம் வெகு சமீபத்திலிருப்பதாக உடனேதானே அறிந்துகொண்டார். ஷில்லர் மூச்சுவிடக் கஷ்டப்பட்டார். மரணவேர்வை அவருடைய நெற்றியிலும், முகத்திலும் வழிந்துகொண்டிருந்தது. முகத்தில் மரணக்களை தோன்றியது. என்றாலும், அவர் பூரணசுயஅறிவுடன் இருந்தார். சுவாமியார் அறையுட்புகுந்ததும்; ஷில்லரின் கண்கள் அவரை அன்புடன் வரவேற்றன. சுவாமியார் சற்றுவேளைநோயாளியுடன் சம்பாஷித்தார். அவருக்கு ஆறுதலும், உற்சாகமுங் கொடுக்கக்கூடிய புத்திமதிகளைச் சொன்னார். நமதுசீவியம் சருவேசுரனுடையகைகளிற் தங்கியிருக்கிறதென்றும், அவருக்குச் சித்தமானால்—எங்கள்மன்றாட்டுகள் கேட்கப்பட்டால் ஷில்லர் கூடியவிரைவில் சுகம்பெறக் கூடுமென்றும்சொல்லி அவனைத்தேற்றினர்.

சற்றுவேளையால், "உமது சமயத்தில் நீர்பூரணதிருப்தியாய் இருக்கிறீர் தானே; சரி. கன்னியாஸ்திரிமாரோடு நீர் எவ்வளவோகாலம் புழங்கியிருக்கிறீர்; அவர்கள்மூலம் கத்தோலிக்க சமயத்தைப்பற்றியும் தெரிந்திருப்பீர்; அதிலிருந்து அவர்கள் சேர்ந்திருக்கும் திருமறையில் நீரும்சேர்ந்தாலோஎன்ற எண்ணம் எப்போதாவது உமக்கு உதித்திருக்குமோ என்று எனக்குள்ள சந்தேகத்தை நிவிர்த்தியாக்க இதைக் கேட்கிறேன்ஒழிய மற்றப்படியல்ல; இதைப்பற்றி உமது நோக்கம் என்ன" என்று சுவாமியார் கேட்டார்.

ஷில்லர் மௌனமாய் இருந்தார். பின்பு "சுவாமி, நான் எனதுசமயத்தை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை; என்னுடைய இனசனர்எல்லோரும் லூதர் மதத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களில் மரித்தோர் எல்லாரும் லூதர்மதச் சேமக்காலையிலேயே அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறார்கள்; அவர்களோடு கிடப்பதே எனக்குவிருப்பம்; அல்லாமலும் எனது சீவியகாலம் மட்டும் இந்தச் சமயத்தில் இருந்துவிட்டுக் கடைசி வேளையில் மதத்தைமாற்றுவது சரியல்ல எனநினைக்கிறேன்" என்று கம்மலானகுரலில் பதில்கொடுத்தார்.

இவ்விதஉறுதியான, திடாரிக்கமான மறுமொழியின் மத்தியில் சுவாமியார் கதையைவளர்க்க விரும்பவில்லை. நோயாளியின் படுக்கைஓரத்தில் முழந்தாளிலிருந்து, விசுவாசமுயற்சி, நம்பிக்கை முயற்சி, தேவசிநேகமுயற்சிகளை ஓதினார். நோயாளியோடுசேர்ந்து உத்தம மனஸ்தாபமுயற்சி சொன்னார். ஆசை ஞானஸ்நானத்தின் வார்த்தைகளை ஷில்லரைக்கொண்டு சொல்லுவித்தார்.

செபங்கள் முடிந்தபின் சுவாமியார் கடைசிஆசீர்வாதம் அருளிப் புறப்பட எத்தனிக்கும்போது ஏதோ ஒருஅருளால் ஒரு எண்ணம் அவருக்குத் தோன்றியது. அவர் உடனே கட்டிலின் பக்கமாகக் குனிந்து, "பரிசுத்த கன்னிமரியம்மாளைப்பற்றி நீர் அறிந்திருக்கிறீர் தானே" என்று கேட்க, "ஆம், அறிவேன்" என்றபதில் கிடைத்தது. "அப்படியானால், இன்றிரவு உமக்கு நித்திரைவரக் கஷ்டமாயிருந்தால், அவவுக்கு ஒருசிறிய செபஞ் சொல்வதற்கு யாதொரு தடையும் இல்லையென நம்புகிறேன்; அப்படி ஒரு செபஞ்சொல்ல உமக்கு விருப்பமா?" என்று சுவாமியார் வினவினர்.

"சொல்லக் கூடுமானால் சொல்லலாம்" என்று ஷில்லர் கூறினார்.

இதோ அந்தச் செபத்தைச்சொல்லிக் கொடுக்கிறேன்; கவனமாகக் கேளும்; "அர்ச். மரியாயே, சருவேசுரனுடைய மாதாவே, எனக்காக இப்போதும், எனது மரணவேளையிலும் வேண்டிக்கொள்ளும்" இதை நினைப்பில் வைத்திருக்க முடியுமா" என்றார்; குருவானவர் திரும்பத்திரும்பப் பலமுறை சொல்லிக்கொடுத்தார், ஷில்லர் அவருக்குப்பின்னால் சொன்னர். செபம் திருப்திகரமாகப் பாடமாக்கப்பட்டதும் குருவானவர் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்.

(தொடரும்)

## ஆசிரியர்களின் ஞான ஒடுக்கம்

ஆசிரியர்களின் வருடாந்த ஞானவொடுக்கம் கொழும்புத்துறைத் தாபனத்தில் இம்மாதம் 26-ந்திகதி வியாழக்கிழமை பின்னேரம் ஆரம்பமாகி 30-ந்திகதி திங்கட்கிழமை காலை முடிவாகும்.

மருதமடுப்பதியில் நடந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றாத ஆசிரியர்கள் அனைவரும் இதில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றவிரும்பும் ஆசிரியர் கூடியவிரைவில் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கும் இந்தஞானவொடுக்கத்தில் பங்குஉண்டு என்று நினைவூட்டுகிறோம்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 2-3-53.

## வியாகுல பிரசங்கம்

(பசாம்)

முன்னாள் இலங்கையின் வேதவிற்பன்னராய் விளங்கியிருந்த யாக்கோமே கொன்சால்வேஸ் என்னும் அருந்தவமுனிவரால் இயற்றப்பட்டது.

இதில், எங்கள்நாயக யேசுக்கிறீஸ்து மானிடஈடேற்றத்துக்காகப் பூங்காவனத்திலே தொடங்கிச் சிலுவைமரணம் வரைக்கும் அனுபவித்த பாடுகளின் சாங்கேஷம் ஒன்பது குறிப்பிடப் பிரசங்கங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது.

விலை பிரதி ரூபா 1 சதம் 50.
தபாற்செலவு 30 சதம்.

கிடைக்குமிடம்:

அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். சதாசகாயமாதாவின் வேண்டுதலாலும், சங். அல்போன்சா கன்னியாஸ்திரியின் மன்றாட்டாலும் நான் கேட்ட காரியம் அனுகூலமானபடியால் நேர்த்திப்பிரகாரம் இதனைப் பத்திரிகையில் பிரசுரஞ்செய்கின்றேன்.

யாழ்ப்பாணம் ஏ. மாகிறேற்

# "MADHU"—A BROCHURE

BY

**CHEVALIER S. ARULANANTHAM**

The *Greatest Story of Love for Lanka*, that is Madhu, is yet to be written. What a thrilling Saga would it not be? Feign would I set my tabernacle there, there, in that sacred spot, that delectable garden, that purlieus of Paradise. "Keep your ecstasies, Sir, for a better opportunity. Write only about this brochure," was the cold, calculated, dictatorial command of the Editor, given with an acidity and a frigidity and a freezing dignity, of which only editors are capable. I obey Sir.

The brochure is beautifully got up, with some good photos, and a detailed map of the Madhu Camp. But the best in it, is a picture of Our Lady of Madhu, a real masterpiece of the printer's art. The booklet contains only 24 pages, but is packed with matter, enough to make one reflect for days. There is a Historical Survey, giving the origin of Madhu, and Madhu under the Oratorians and the Oblates. The Devotional Survey is partly historical and partly devotional, and relates about the crowning of Our Lady, Queen of Madhu, the Consecration of the Church, "Mary's Mission," the penitential tour and the Jubilee Celebration. The second part speaks of Our Lady as Light to the benighted, Refuge of Sinners, Comfort of the afflicted and of her insistent call to the pilgrims to make of her shrine a Home of prayer and penance. An essay entiled "A Day at Madhu" followed by a List of Festivals, concludes the booklet.

The brochure is a "must," in the family library of all the clients of Our Lady of Madhu. There is one omission, which is not the fault of the compiler, but yet must be rectified. As the reader turns to page 6, he sees the detailed map of the Madhu Camp. That map speaks volumes, about the love and the care lavished by our Oblate Prelates (from Dr. Bonjean, to our present Bishop Dr. Emilianus Pillai) on the shrine, to whom Madhu had been and is the apple of their eye, their home of rest, counsel, courage, inspiration, consolation and enlightenment. But the omission I hinted at, refers to three of the most valiant Knights of Our Lady of Madhu, whose pictures should justly adorn a page of this brochure—Olive, Huctin, Brohan, whose names will ever remain inseparably associated in the hearts of millions of pilgrims with Madhu, canonized as they are, as the Michael, Gabriel and Raphæl of Madhu.

There is one sentence in the brochure, relating to "Mary's Mission," which cannot but arrest the attention of every thinking Catholic. It runs:—Some holy Prelates and priests who have visited Madhu, "*think that Our Lady of Madhu is the means chosen by God, to bring the whole of Ceylon into the true fold.*" It is indeed the Vision Splendid. Madhu had become a place of Our Lady's predilection, centuries before she manifested herself at Lourdes and Fatima. What the Divine Plan is, is known only to Our Lady. Yet, the words of Bishop Sheen in another context throw some light on it. He writes, "Mary laid her *First Born* in the Manger." But she was to have other children, not according to the flesh, but according to the spirit. "Behold Thy Mother"! There are millions of people who have as yet, not given even an inn, to Christ Our Redeemer. Jesus is not yet among them. But Mary is.........She is there preparing them for grace, the eager Mother, ever eager to lead the ignorant and the sinful to the feet of her Divine Son. *Faith will flourish and bloom in the East, through Mary the Madonna.* For she is still "MA DONNA"—My Lady, Our Lady."

Yes! Mary is the "Gate of the Orient." *Madhu, Tholagatty, Tewatte,* where in the Children of Lanka will find the Light of Faith the palladium of Freedom and Hope, Peace and Security. Ave Maria!......

## தேவாமுதம் அல்லது ஞானவாசிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் சிங்காசனத்தில் இருந்துகொண்டே வெகுபக்தியுள்ளவர்களானார்கள். பலமுறை பலபேருக்கு வனாந்தர தனிவாசத்தில் தங்கள் பக்திநெறியை இழந்து போகும்படியான சந்தர்ப்பம் நேரிட்டும் இருக்கிறது. ஆகிலும் பக்திநெறிச்சீவியத்தை அடைய இதிலும் உத்தமமான இடங்கிடையாது. இப்படியிருந்தும் முன்சொல்லப்பட்டவர்கள் உலக சந்தடியிற் சஞ்சரித்தும் பக்திநெறியிற் சீவித்தார்கள். ஆகிலும்பக்திநெறிக்கு உலகம் எவ்வளவோ பொருந்தாததாய்க் காணப்படுகிறது. இத்தன்மையாய் நாம்எவ்வித அந்தஸ்திலும், தொழிலிலும் இருந்தபோதிலும் பக்தியுள்ளவர்களாய் நடப்பது கூடுமானகாரியமாய் இருப்பதுமன்றி இன்னும் பக்திநெறியை அடைய விருப்பங்கொண்டு பிரயாசப்பட வேண்டியவர்களாயுமிருக்கின்றோம்.

## நன்றித்துதி

பரிசுத்த கதிரைமாதாவின் அனுக்கிரகத்தினாலும், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினாலும் எனது மருமகன் ஏ. டபிள்யு. ஜோண்பிள்ளையை எட்டுவருஷமாகப் பிடித்துநீடித்திருந்த புண், வேத முதலியார் செய்தசிகிச்சையால் சுகமாயிற்று.

சில்லாலை அ. விக்ரோறியம்மா

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

"திறம்படச் செய்" என்பது சிறந்த ஓர்சுலோகம். நீங்கள் வாசிக்கும்போது, அல்லது எழுதும்போது திறமையாய்ச் செய்யுங்கள். சரித்திரமோ, வீசகணிதமோ படிக்கும்பொழுது நன்ருய்ப் படியுங்கள். அப்படிச் செய்யாவிடில் உங்கள் படிப்பு உபயோக மற்றதாகும். நீங்கள் நூறுபுள்ளிகள் பேறு அடையாவிடினும் நீங்கள் உங்களாலாம் அளவு திறமையாய்ச் செய்தால் போதும். அப்படிச் செய்துவந்தால் இறுதியில் உச்சத்தை அடைவீர்கள்.

திறம்படச்செய் என்னும் சுலோகத்தை நாடோறும் உங்கள் மனதில் இருத்துங்கள். அதிகாலையில் "எந்த அற்பவேலையாய் இருந்தாலும் இன்றுசெய்வதைத் திறம்படச் செய்வேன்" என்று சொல்லித் தீர்மானம் பண்ணுங்கள். அதின்படி ஒருநாளைக்கு, இருநாளைக்கு, ஒருகிழமைக்குச் செய்துபாருங்கள். நீங்கள் சகலத்திலும் திருந்துவதை உணர்வீர்கள். செபஞ்செய்யும் பொழுதும், வேலைசெய்யும் பொழுதும் திறமாய்ச் செய்யுங்கள். விளையாட்டிலும் அப்படிச் செய்யுங்கள். பின்வரக்கூடிய கஷ்டங்களை அவ்வேளை எண்ணுதேயுங்கள். முழு ஊக்கத்தையும் விளையாட்டில் செலுத்துங்கள்.

"திறம்படச் செய்" என்பது நன்மையைப் பயக்கும். வெற்றியடையச் செய்யும்.

சிறுஅலுவல்களிலும் பெரியகவனம் எடுப்பது இன்பத்தைத் தரும்.

வணக்கம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சிரிக்க வேண்டும்

I

சிரிக்க வேண்டுங் குழந்தாய்! — நீ
சிரித்து வாழ வேண்டும்
வருத்துந் துன்பம் நீங்கி — நீ
வளர வேண்டுங் குழந்தாய்

II

மகிழ்ச்சி யூட்டுஞ் சிரிப்பு — நன்
மலர்ச்சி கூட்டுஞ் சிரிப்பு
அயர்ச்சி யோட்டுஞ் சிரிப்பு — நீ
அதிகஞ் சிரிக்க வேண்டும்

III

உள்ளம் மலரச் சிரிப்பாய் — உன்
உடலம் மலரச் சிரிப்பாய்
கொள்ளை இன்பந் தேங்க — நீ
குலுங்கிச் சிரிக்க வேண்டும்

IV

மலர்கள் போலச் சிரிப்பாய் — பொன்
மதியைப் போலச் சிரிப்பாய்
அலைகள் போலச் சிரிப்பாய் — உன்
அழகுச் சிரிப்பு வேண்டும்

"ஜெயம்"

## அஞ்சா நெஞ்சமுடைய கருதினல்

கருதினல் பச்செல்லிஆண்டவர் 1920-ம் ஆண்டு ஜேர்மனியிலே மூனிச் நகரில் பாப்பரசரின் ஸ்தானிகராக இருந்தார். அப்போது அப்பகுதியில் கம்யூனிஸ்தர் என அறியப்படுகின்ற பொதுஉடைமைக் கட்சியினரின் ஆர்ப்பாட்டம் மிகமும்முரமாய் இருந்தது. அவர்களின் தலைவர்கள் பாப்பரசரின் ஸ்தானிகரான கருதினல் பச்செல்லி ஆண்டவரைக் கொன்றுவிடுமாறு இரகசியமாகச் சதிசெய்தனர். அதன்படி பொதுஉடைமைக் கட்சியினர்இருவர் மறைவாக அவருடைய அறைக்குள் நுழைந்து, ஒருதிரைக்குள் மறைந்துகொண்டு இருக்கும்போது அவ்வறைக்குள் கருதினல் பச்செல்லிஆண்டவர் பிரவேசித்தார். பிரவேசித்ததும் மறைந்துஇருந்தவர்களில் ஒருவன் துப்பாக்கிஒன்றால் அவர்மீது குறிவைத்துச் சுட்டான். சுடவே அத்துப்பாக்கியிலிருந்து வெளிகொண்ட குண்டு தமதுமார்பில் அவர் அணிந்திருந்த குருசில் பாய்ந்து துள்ளிக்கொண்டு கீழேவிழுந்தது. அப்போது கருதினலாண்டவர் சற்றுமே அஞ்சாதவராய் வெடிதீர்ந்தபாதகன் கைநெகிழ விட்டிருந்த துப்பாக்கியை நிலத்திலிருந்து எடுத்து அவனிடம் கொடுத்து: "நாம் பயப்படவில்லை; எமதுமக்களின் இரட்சணியத்திலேயே நாம் கருத்தாயிருக்கிறோம்" என்று தீரத்துடன் மொழிந்தார். இதைக்கேட்டதே அவரைக் கொல்லும் நோக்கத்துடன் வந்த பாதகர்கள் தாங்கள் எண்ணிவந்த கருமம் கைகூடாமல் போனதையிட்டு வியப்பும், திகைப்பும் கொண்டவர்களாய் மெல்லென அவ்விடத்திலிருந்து விலகிச்சென்றனர்.

இவ்வித அஞ்சாநெஞ்சம் படைத்த கருதினல் ஆண்டவரே தற்போது திருச்சபையின் தலைவராய், எமது ஞானப் பிதாவாய் இருந்து வருகின்ற பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர்.

அன்று மூனிச்நகரில் வெடிகுண்டால் தாக்கப்பட்ட அதே குருசு இன்று ஐக்கிய அமெரிக்கதேச நியூயோக் நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவருகின்ற கருதினல் யோசெவ் ஸ்பெல்மன் ஆண்டவர் கழுத்தில் தொங்கிக்கொண் டிருக்கிறது. தேவ திருவுளந்தான் என்னே!

## பரிசுபெற்ற கதை

ஆனந்தனும், நேசமும் என்ற இரு இளைஞர் இருந்தனர். ஆனந்தனின் தாய்தந்தையர் பெரியபணக்காரர். அவர்களுக்கு ஆனந்தன் தான் பிள்ளை. அவன் பாடசாலைக்குச் செல்பவன். செல்லும்பொழுது தாய் "பொக்கற் மனி" (Pocket money) கொடுத்து விடுவாள். நாளாந்தம் இதை ஆனந்தன் வீண்செலவு செய்யாமலும், தாய் தந்தையர்க்குத் தெரியாமலும் சேவிங் பாங்கில் போட்டுவைத்திருந்தான். நேசம் ஓர் ஏழைப்பையன். அவனுக்குப் பத்துவயது நடக்கும்போது அவனுடைய அம்மா இறந்துவிட்டாள். பதினைந்துவயதை அவன் எட்டிப்பிடிக்கும் பொழுது தந்தையும் இறந்துவிட்டார். அதனால் நேசம் தன்படிப்பிற்கு முற்றுப்புள்ளி இட்டுக் கூலிவேலை செய்து உழைத்து உண்டுவந்தான். அவனுக்கு மூன்று பெண்சகோதரிகளும் இருந்தனர். நேசம் உழைக்கும் பணம் அவனையே தாபரிக்கப் போதாது. அப்படியிருக்க, சகோதரிகளையும் தாபரிப்பது எப்படி? அதனால் அவன் உறக்கமின்றி உழைத்துவந்தான்.

இப்படி மூன்றுவருடங்கள் கழிந்தன. ஒருநாள் மாடியில் வேலைசெய்து கொண்டிருக்கும்போது அவன் தவறிக் கீழேவிழுந்து படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் கொண்டுபோய் விடப்பட்டான். இதை அவன் தங்கை ஆனந்தனிடம் கூறினுள். ஆனந்தன் இதைக்கேட்டதே பெருந்துயரம் அடைந்தான். அவனைப் போய்ப்பார்க்க வேண்டுமென்ற ஆசைமேலிட்டுத் தாயிடம்சென்று அனுமதி கேட்டான். தாய் சம்மதிக்கவில்லை. பிறர்சிநேகமுள்ள ஆனந்தன் எப்படியாவது நேசத்தைப் போய்ப்பார்க்க வேண்டுமென்ற ஆசையினுல் தந்தையிடம் போய் உத்தரவு கேட்டான். அவரும் முதலில் மறுத்தபின் ஒருவாறு சம்மதித்தார். உடனே அவன் ஓடோடியும் வைத்தியசாலை சென்றான். அங்கே நேசத்தின் சகோதரிகள் அழுது கொண்டு நிற்பதையும், அவன் படுகாயத்துடன் கட்டிலில்படுத்திருப்பதையும் கண்டபொழுது ஆனந்தனுக்குப் பெருங்கவலை எழுந்தது. ஆயினும் தான் கவலைப்பட்டால் அவர்களின் கவலையைப் போக்க முடியாதென்று நினைந்து ஒருவாறு சமாளித்துக்கொண்டு ஆறுதல்கூறி அவர்களைத் தேற்றினன். அவர்களிடம்பணமில்லை; அவர்கள் பட்டினிகிடக்கிருர்களென்று குறிப்பால் உணர்ந்த ஆனந்தன் தனது வீட்டுக்குச் சென்று தான்தபாற்கந்தோரில் போட்டுவைத்த பணத்திலே ரூபா நூறைஎடுத்துக்கொண்டுவைத்தியசாலைசென்று நேசத்திடம் கொடுத்தான். நேசம் ஆனந்தத்தோடு அதை வாங்கிச் சகோதரிகளிடம் கொடுத்தான். அதைக்கொண்டு அவர்களும் பட்டினி கிடவாமல் தங்களையும்காத்து, நேசத்தையும் பராமரித்துவந்தார்கள். சிலநாட்களுள் அவனும் குணமடைந்து வீட்டுக்குச் சென்ருன். ஆனந்தனின் பிறர்சிநேகத்தையும், அவன் செய்த பேருதவியையும் அவர்கள் இன்னுமே பாராட்டுகிருர்கள்.

பி. திருச்செல்வம்
வதிரிதெற்கு றோ. க. பாடசாலை,
கரவெட்டி.

## முதற்பழம்

ஒருநாள், மரியதாசுக்கு அவன்நண்பன் ஒரு தக்காளிக்கன்று கொடுத்தான். மரியதாஸ் அந்தக்கன்றைத் தன்வீட்டுக்குக் கொண்டுவந்து, பக்குவமாய் நட்டான். பசளையிட்டான். காலையும் மாலையும் நீர் ஊற்றினுன். கவனமாகப் பாதுகாத்து வளர்த்தான். புதிய புதிய இலைகள் துளிர்த்துக் கன்றும் பெரிதாகிவந்தது. மரியதாசுக்கு ஒரேஆனந்தம். 'மள' 'மள' வென்று வளர்ந்துவரும் கன்றைப்பார்த்து, "தக்காளியே! தக்காளியே!! எனக்குத் தங்கப்பழம் காய்த்துத்தா" என்று எப்போதும் குதிகுதிப்பான்.

தக்காளியும் பூத்தது; பூத்துச் சிரித்தது; காய்த்தது. காயைக் கண்டதும் தாசுக்கு ஆனந்தம் அடக்க முடியவில்லை. தொட்டுத்தொட்டுப் பார்த்தான். தடவிப்பார்த்தான். அம்மா, அப்பா, தங்கை, தம்பி, ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டினுன். தக்காளிக்காயைப் பார்த்து ஒருபடமும் வரைந்தான். தாஸ் அதற்குப் பச்சை வர்ணம் தீட்டவில்லை. சிவப்பு நிறமே தீட்டினுன். கனிந்த பழமாகவே வரைந்தான். படத்தைக்கொண்டு போய்த் தக்காளிக்குக் காட்டி "எனக்கு இப்படி அழகான பழந்தா வேண்டும்" என்று கெஞ்சுவான். கொஞ்சுவான்.

சிலநாட்கள் சென்றன. தக்காளி மரத்தில் ஒரு கொழுத்த பழந் தொங்கியது. தாசுக்கு ஆசையும், ஆனந்தமும் பொங்கின. நாக்கில் நீர் ஊறிச் சொட்டியது. பள, பளவென்று இருந்த அழகிய பழத்தை மிருதுவாகத் தடவி, மெதுவாகப் பிடுங்கினுன். தங்கையும் அங்குவந்தாள். இருவரும் துள்ளிக் குதித்துக்கொண்டு வீட்டின்முன் கூடத்துக்கு ஓடினர்.

"அம்மா! பிச்சைபோடுங்க தாயே! பசிதாங்க முடியவில்லையே" என்று அலறிக்கொண்டு ஒரு கிழவன்—பிச்சைக்காரன் அங்குவந்தான். மரியதாஸ் பழத்தையும், கிழவன் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். பழம் சிரித்துக்கொண்டு இருந்தது. கிழவன்முகம், வாடிச் சுருங்கியிருந்தது.

"அண்ணா! அப்பா பாவம்" என்று தங்கை கிழவன்மீது அனுதாபங் காட்டினுள். தாசுக்கும் இருதயம் இளகிவிட்டது. இரக்கம் உண்டாயிற்று.

பழத்தைக் கிழவன் கையில் கொடுத்தான். கிழவனுக்கு மனங் குளிர்ந்தது. முகம்மலர்ந்தது. அதைக்கண்டு அண்ணனும் தங்கையும் மகிழ்ந்தனர்.

அம்மா வந்தாள். "முதற்பழம் எங்கே?" என்ருள். "சின்னயேசுவுக்குக் கொடுத்து விட்டேனம்மா" என்று கூறினுன் மரியதாஸ்.

"போன்"

—பிரித்தானியிலே கம்யூனிஸ்த கட்சியின்பலம் குறைந்துகொண்டே வருகின்றது. 1950-ம்ஆண்டு அக்கட்சியில் 45,000 பேரும், இற்றைக்குப் பத்துவருடங்களின்முன் 60,000 பேரும் இருந்தவிடத்திலே தற்போது 35,000 பேரே இருக்கின்ருர்கள். இரும்புத்திரை நாடுகளுக்குப் பின்னுல் யூதஎதிர்ப்புஇயக்கம் நடைபெறுவதன்காரணமாக அக்கட்சியிலிருந்து பெருந்தொகையினர் வலசைவாங்குவதாகச் செய்திபரந்துள்ளது.

—சென்ற தைமாதம் 7-ந்திகதி முதல் பிரேதக்குழிவெட்டும் 200 பேர் வேலைநிறுத்தஞ் செய்துகொண்டிருப்பதாலே நியூயோக்நகரிலுள்ள பத்துச் சேமக்காலைகளிலும் சென்றவியாழக் கிழமை 550-க்குமேற்பட்ட பிரேதங்கள் அடக்கஞ்செய்யப்படாமல் இருந்தன. இனத்தவர்கள் பிரேதக் குழிகளை வெட்டித் தங்களுள் இறந்தவர்களின் பிரேதங்களை அடக்கஞ்செய்கின்ருர்கள்.

—உலகமெங்கும் யுத்தபீதி ஏற்பட்டுள்ளபோதிலும் சமீபகாலத்தில் உலகயுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய நிலைமை இல்லையென்று அமெரிக்க இராணுவஇணைப்பு அதிகாரிகளின் தலைவரான ஜெனறல் ஓமர் பிருட்லி அவர்கள் சென்ற 28-ந்திகதி வாஷிங்ரன்நகரிலே ஜனதிபதியின் வெள்ளை மாளிகையில் கூடியிருந்த அமெரிக்க பாராளுமன்ற அங்கத்தினர்கள் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்ருர்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1.** பிரித்தானிய இராசகுடும்பத்தினர்வசித்துவரும் பிரஸ்தாபமாளிகைகள்எத்தனை?

ஆறு. அவையாவன: (1) பக்கிங்காம்மாளிகை — அரசரும் அரசியும் நிரந்தரமாகவசிக்கும் மாளிகை.

(2) கிளாமிஸ்மாளிகை — மாஜி இராணியார் வசிக்கும்மாளிகை.

(3) வின்சர்மாளிகை—இராசகுடும்பம் வாரஇறுதியில்போய்த் தங்கும் மாளிகை.

(4) ஹோலிறூட் மாளிகை — ஸ்கொத்லாந்திலே எடின்பரோ நகரில் அரசினதும், அரசியினதும் அதிகாரபூர்வமான மாளிகை.

(5) சந்திரிங்காம்மாளிகை—இராசகுடும்பம் கிறிஸ்மஸ்விழாக் காலத்தை வழமையிலேசெலவிடும் மாளிகை.

(6) பல்மோறல்மாளிகை — இராசகுடும்பம் கோடைகாலத்தில் ஓர்பகுதியை எப்போதும் செலவிட்டுவரும் மாளிகை.

**2.** பாப்பரசரின் மெய்காப்பாளராக இருந்துவருகிறவர்கள் யார்?

ரோமைப் பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பிரபு காவலர்களே. இவர்களின் பாதுகாவலர் அர்ச். செபஸ்தியாரே. இவர்கள் தம்பாதுகாவலர் திருநாளைவருடந்தோறும் தைமாதம் 20-ந் திகதியன்று வத்திக்கானிலே கொண்டாடிவருகிறார்கள்.

**3.** ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன்திருநாட்களிலும் ஓர்பங்குவிசாரணைக் குருவானவர் எவருக்காகத் திவ்வியபூசை நிறைவேற்றவேண்டும்?

தமது பங்குவிசாரணைக் கிறீஸ்தவர்களுக்காகவே திவ்வியபூசை நிறைவேற்ற வேண்டும்.

**4.** மரித்தவொருவரின் பிரேதத்தைச் சுடுவதற்கும் திருச்சபை எப்போதாவது அனுகிப்பதுண்டா?

ஆம், கொள்ளை நோய் ஏற்படுங் காலத்து, பொதுசனசுகாதாரத்தையிட்டு அவசியமென்று காணும்போது அவ்வாறுசெய்ய அநுமதிகொடுப்பதுண்டு.

**5.** வத்திக்கான் இராசியத்தை லௌகிகமுறையிலே ஆட்சிசெய்கிறவர் யார்?

பரிசுத்தபிதாவால் நியமனஞ்செய்யப்படுகிறவரும், அவருக்கே உத்தரவாதம்அளிக்கவேண்டியவரும், ஓர் சாதாரண கத்தோலிக்கருமான தேசாதிபதி ஒருவரே.

**6.** போர்த்துக்காலிலே உலகப்பிரசித்திபெற்ற பாத்திமா திருசேத்திரம் எந்தமேற்றிராசனத்தில் அடங்கியிருக்கிறது?

லீறியா மேற்றிராசனத்தில் அடங்கியிருக்கிறது. இந்தமேற்றிராசனம் பாத்திமாவிலே தேவதாயார் காட்சியளித்து மூன்றுவருடங்களின்பின் — அதாவது, 1920-ம்ஆண்டு திரும்பவும் ஆக்கப்பட்டது. அதுமுதல் இதன் மேற்றிராணியாராய் இருந்துவருகிறவர் 81 வயசுடையவரான டாசில்வாஆண்டவரே. அப்போது வேதவிரோதிகள் இவரைத்தாக்கி வாதித்தகாரணமாக இவர் ஓர் முடவராக இருந்துவருகிறார்.

**7.** திருச்சபையிலுள்ள கருதினல்மார் எத்தனை வரிசைகளாக அதாவது எத்தனை படிமுறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்?

(1) கருதினல் மேற்றிராணிமார், (2) கருதினல் குருமார், (3) கருதினல் தியாக்கோன்மார்என மூன்றுவரிசைகளாக அல்லது படிமுறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறனர்.

**8.** கருதினல் மேற்றிராணிமாரென அறியப்படுகிறவர்கள் யார்?

ரோமைநகருக்குச் சமீபமாயுள்ள ஒஸ்ரியா, போட்ரோ, அல்பானோ, வெலெற்றி, சபினே, பிறுயனெஸ்ரேஎனும் ஆறுநகரங்களிலும் மேற்றிராணித்துவ பதவிகள் வகித்திருப்பவர்களே. ஆதலால் கருதினல் மேற்றிராணிமாரின் தொகை ஆறுமாத்திரமே.

**9.** கருதினல் குருமாரென அறியப்படுகிறவர்கள் யார்?

கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள ஏனையமேற்றிராணிமார், அல்லது அதிமேற்றிராணிமார்களே. இவர்களின் அதிகங்கூடியதொகை ஐம்பதாகும்.

**10.** கருதினல் தியாக்கோன்மாரென அறியப்படுகிறவர்கள் யார்?

கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள குருமாரே. இவர்கள் தொகை பதினைன்காகும். ஆனால், இவர்களில் எவராவது பத்துவருடகாலம் ஓர்தியாக்கோனாக இருந்ததன்மேல் ஓர் கருதினல் குருவானவராக அனுமதிக்கப்படலாம்.

**11.** வத்திக்கானிலே சுவிஸ்காவலர் பட்டாளம் எப்போது ஏற்படுத்தப்பட்டது?

1505-ம்ஆண்டு ஏற்படுத்தப்பட்டது இதிலே 104 காவல்வீரரும், 6 அதிகாரிகளும் அடங்கியிருக்கின்றார்கள்.

**12.** ஓர் உத்தமதாயைப்பற்றி ஜி. ஹெர்பேட் எனும் கல்விமான் யாது கூறுகின்றார்?

ஒரு நூற்றுக்குமேற்பட்ட ஆசிரியர்களைக்காட்டிலும் ஓர் உத்தமதாய்கூடிய மதிப்பு வாய்ந்தவளெனக் கூறுகின்றார்.

**13.** புதியஉலகமென்று அறியப்படுகின்ற அமெரிக்காவின் முதல்அர்ச்சியசிஷ்டவள் யார்?

லீமாநகர் அர்ச்சியசிஷ்ட ரோசம்மாளே.



## 2-ம் வருட
## மரண ஞாபகம்

பிறப்பு: 29—10—1883
இறப்பு: 7— 3—1951

யாழ்ப்பாணத்திலே பிரபல வர்த்தகராய், பிரஸ்தாபமாக அறியப்பெற்றவராய் விளங்கியிருந்த ஸ்ரீமான் இம்மனுவேல் திருச்செல்வம் அவர்கள் இறைவன் அடிசேர்ந்த இரண்டாம் வருட நிறைவுதினம் நிகழும் பங்குனிமாதம் 7-ந் திகதியாகிய வருகிறசனிக்கிழமை பூர்த்தியாகின்றது. அன்றுகாலை யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலநாயகியின் ஆலயத்திலே இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். அத்தருணம் இனசனர்களும், அன்பர்களும் திரளாகச்சமுகந்தந்து அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், கன்னியர்களும் தங்கள்செபங்களில் அவரை நினைவுகூரும்படியாகப் பரிவாகவேண்டுகின்றோம்.

பாரியாரும், மருகர், மகள்,
பௌத்திரர்களும்.

"எலிசபேத் வில்லா"
4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

## நானா சங்கதிகள்

— எலிசபேத் மகாராணியாரின் மகுடாபிஷேகத்துக்குச் சமுகமளிக்கவிருக்கின்ற யப்பானிய பட்டத்துக் குமாரனான அகிஹிற்றோ இளவரசர் தமதுஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தின்போது வத்திக்கானுக்கும் விஜயஞ் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவர்தந்தையாரான ஹிறோஹிற்றோ சக்கரவர்த்தி பட்டத்துக்குமாரனாயிருந்தபோது முதலாவது உலகயுத்தத்தின்பின் ரோமாபுரி சென்றிருந்தவிடத்து வத்திக்கான் மாளிகைசென்று 15-ம் ஆசீர்வாதப்பர் பாப்பானவரைச் சந்திக்கலாயினர்.

— ஐக்கிய அமெரிக்கதேசத்தில் அநேகவருடகாலமாகமுதன்மைவாய்ந்த ஓர்கம்யூனிஸ்த ஸ்திரியாயிருந்த டக்றர் பெல்லா டொட்எனும் மாது அங்கு போனபிரசங்கியாராய் விளங்கும் புல்ரன்ஷீன் மேற்றிராணியாரின் உபதேசத்தால் மனந்திரும்பிக் கத்தோலிக்கசமயத்தில் சேர்ந்திருக்கின்றாள். சமீபத்திலே இவள் அங்கு புறூக்லின்நகரிலுள்ள சென் ஜோண்ஸ் சர்வகலாசாலையில் கம்யூனிஸத்தின் தப்பறைபற்றிக்கற்பிக்கும் ஓர்போதகாசிரியையாக நியமனம்பெற்றிருக்கின்றாள்.

— "கோறியாவைஇழந்தால் ஐப்பானையும், மற்றுமுள்ள ஆசியநாடுகளையும் கம்யூனிஸ்தர்கள் கைப்பற்றி விடுவார்கள்; பசிபிக்சமுத்திரமும் அவர்களின் ஆதிக்கத்திற்குள்ளாகும்; இந்த உண்மையை அமெரிக்கவரசும், ஐ. நா. ஸ்தாபனமும் உணரவேண்டும்; கோறியயுத்தமானது ருஷியாவின் ஆதரவுடன் ஸ்ராலின்நடத்தும் யுத்தமாகும்" என்று கோறியாவிலே சமீபகாலம்வரையில் ஐ. நா. பிரதமசேனாபதியாயிருந்துவந்த ஜெனறல் வான் பிளீற்அவர்கள் கூறுகின்றார்.

— ருஷியாவிலே சோவியற்அரசாங்கத்தின் அனுமதியைப்பெற்றுத் தொண்டாற்றிவருகின்ற ருஷிய பிரிவினைச்சபைக் குருமாரைக்காட்டிலும் மறைமுகமாகத் தொண்டாற்றிவருகின்ற ருஷிய பிரிவினைக்குருமார் பெருந்தொகையாயிருப்பதாகப் பேர்லின்நகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. இவர்கள்தொழிலாளராகவும், கிளாக்குமாராகவும் மாறுவேடம்பூண்டு அந்தரங்கமாக ஞானஸ்நானம்கொடுத்தும், விவாகங்கள், மற்றும் தங்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றியும் வருகின்றனராம்.

— இத்தாலியிலே மிலான்நகருக்குச்சமீபமாகப் பொலிசருடன் நடைபெற்ற போராட்டம்ஒன்றில் சுடப்பட்ட ஓர்வாலிபகம்யூனிஸ்தனான ஆஞ்செலோ பெருனிஎன்பவன் பிரான்சீஸ்குவின் சபையைச்சேர்ந்த வண. லாசறோ டி ஜிக்கினியானோ சுவாமியார் தமதுசரீரத்திலிருந்து உதவிய இரத்தம் தனதுஉடலில்செலுத்தப்பட்டுச் சுகமடைந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

— இரண்டாவது உலகயுத்தத்தின்போது பிரித்தானிய தரைப்படை, கடற்படை, விமானப்படைகளிலிருந்து யுத்தசேவைக்குப் பயந்து ஓடித்தப்பிய ஆயிரக்கணக்கான பிரித்தானியயுத்தவீரர்களுக்கு, எலிசபேத்இராணியாரின் முடிசூட்டுவிழாவைமுன்னிட்டுப் பொதுமன்னிப்பு அருளப்பட்டிருக்கிறது. அதனால்இவர்கள்மீது இனிமேல்வழக்குத்தொடரப்படமாட்டாது.

— வடஇந்தியாவிலே ஹௌராப் பகுதியைச்சேர்ந்த சிப்பூர்வாசியான 26 வயசுடைய சவீல் பானர்ஜிஎன்பவர் சென்றமாதம் 18-ந் திகதி அங்கு தொடக்கிநடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப்பந்தயத்திலே 105 மணித்தியாலம் 35 நிமிஷம் இடைவிடாமல் சைக்கிள் ஓடி உலகில்முதன்மைபெற்றிருக்கிறார். இந்தப் போட்டியிலே இவருடன் 39 பேர் கலந்துகொண்டார்கள்.


நமது அச்சியந்திரசாலைப்
புத்தகசாலையில்

## விற்பனைக்கிருக்கும்
## கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் ... | 15 |
| பெரியகுறிப்பிடம் ... | 30 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 25 |
| உறுதிப்பூசுதற்குறிப்பிடம் ... | 05 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள் ... | 2-00 |
| திவ்வியபூசையின் சாதாரணசெபங்கள் ... | 60 |
| மோட்சபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| " " (தோல்) ... | 7-50 |
| முத்தித் திறவுகோல் (தோல்)... | 3-50 |
| ,, ,, (கலிக்கோ) ... | 2-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| திவ்வியபூசைப்பலியின் பேரில் தியானங்கள் (அச்சில்) ... | |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிஷேங்களின் ஒப்புமை ... | 2-95 |
| பசாம் ... ... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் 2-ம்பகுதிநோட்டுகளுடன் | 2-25 |
| நவதின உற்சவம் ... | 75 |
| சற்பிரசாத அன்பன் ... | 30 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| பத்திமாமாதாவும் செபமாலையும் ... | 25 |
| அவர்கள் மூன்றுசிறுவர்கள் (பத்திமா) ... | 2-50 |
| மகாமனந்திரும்புதல் இயக்கப்பிரசங்கங்கள் ... | 1-00 |
| ஞானவொடுக்க பிரசங்கங்கள் (அச்சில்) ... | |
| திவ்வியபூசைமகத்துவம் ... | 2-50 |
| பூசைஉதவி மந்திரம் | 40 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| (Part II) ... | 90 |
| (Part III) (அச்சில்) ... | |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 70 |
| பத்திச்சபைகள் ... | 20 |
| ஆத்துமதரிசனம் ... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் ... | 2-50 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனா அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக்கன்னிகைசரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவியசரித்திரம் ... | 40 |
| நானே குற்றவாளி ... | 1-00 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



### NOTICE

Veda Mudaliyar Jayawardane of Galle Road, Dehiwala have cured the ulcer of my son-in-law Johnpillai of Ratmalane which was lasting for 8 years.

A. VICTORIAMMAH.

## சுதேசவர்த்தமானம்

### வண. ஈ. பொமிக்கோ சுவாமியார்

யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர் கோவில் கட்டளைக் குருவாயிருந்து சுகத்தாழ்வு காரணமாக ஐரோப்பாவுக்குச்சென்றிருந்த வண. ஈ. பொமிக்கோசுவாமியார் சுகம்பெற்றுச் சென்ற செவ்வாய்க்கிழமை சேமமே யாழ்ப்பாணம்வந்து சேரலாயினர்.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைக்குவந்த முதலாவதுவழக்கில் நாவாந்துறையைச்சேர்ந்த நாகர் சின்னப்புஎனும் றிக்ஷோக்காரனைப் பொல்லால்அடித்துக் கொலைசெய்யஎத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நாகமுத்து செல்லத்தம்பிஎன்பவன் கடுங்காயம் உண்டுபண்ணியதில் குற்றவாளியாகி இரண்டுவருடக் கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான். இரண்டாவதாக: துன்னாலைதெற்கைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரை அதே கிராமத்தைச்சேர்ந்த ஏழுபேர்கூடிச் சென்றவருடம் வைகாசிமாதம் 1-ந்திகதியன்று பொல்லுகளால் அடித்துக் கொலைசெய்ய எத்தனித்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்குவிசாரணை சென்றவெள்ளிக்கிழமை பிற்பகல் முடிவடைந்தபோது, யூரிமார் அளித்ததீர்ப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இராததால் அவ்வழக்கைத் திரும்பவும் விசாரணைக்கெடுக்குமாறு நீதியாசர் உத்தரவிட்டனர்.

### தொற்றுநோய் ஆஸ்பத்திரி

யாழ்ப்பாண மேயரான திரு. சாம். ஏ. சபாபதியவர்கள் செய்துகொண்ட மனுவின்பேரிலே அரசாங்கம் யாழ்ப்பாணநகரிலுள்ள தொற்றுநோய்ஆஸ்பத்திரியை நெருப்புக்காய்ச்சல் முதலாம் நோய்கண்டவர்களைத் தனிப்படவைத்துப் பராமரிக்கும் ஓர் ஆஸ்பத்திரியாக மாற்றியமைக்கத் தீர்மானித்திருக்கிறது. அங்ஙனம் மாற்றியமைக்கும்வேலையைக் கூடிய விரைவிலே செய்துமுடிப்பதாகச் சுகாதார சேவைத்தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

### கண்ணாடித் தொழிற்சாலை

கடந்த ஐந்துவருடங்களிலும் திரும்பத்திரும்ப நஷ்டம்ஏற்பட்டுவந்த காரணமாகச்சலாபப்பிரிவைச்சேர்ந்தமாறுவிலில் இருந்துவந்த கண்ணாடித் தொழிற்சாலையைச் சென்ற 23-ந்திகதியுடன்மூடிவிட அரசாங்கம் தீர்மானித்துவிடலாயிற்று. சென்ற 1947-ம் ஆண்டுமுதல் 1952-ம்ஆண்டுவரையில் இந்தத்தொழிற்சாலையில் எட்டுலட்சம் ரூபாவுக்குமேல் நஷ்டம்ஏற்பட்டிருக்கின்றது. இது மூடப்பட்டமையாலே அதில் வேலைசெய்துவந்த மூன்னூறுபேர் பிழைப்பின்றிக் கஷ்டப்படுகின்றார்கள். கடந்தசில மாசங்களிலே சலாபப்பிரிவில் மூடப்பட்ட மூன்றாவது அரசாங்க தொழிற்சாலை இதுவாகும். மற்றவை இரண்டும் மாதம்பையில் இருந்துவந்த அசெற்றிக் அசிட் தொழிற்சாலையும், கக்காப்பிலியாவில் இருந்துவந்த கடுதாசித்தொழிற்சாலையுமாகும்.

### சாராயவிலை இறங்கியது

இம்மாசம் 1-ந்திகதியாகிய சென்ற ஞாயிறுமுதல் சாராயத்தின்விலை முந்தியஅளவிற்குக் குறைக்கப்படலாயிற்று. அன்றுமுதல் சாதாரண வடிச்சாராயம் ஒருபோத்தல் 6 ரூபாவாகவும், விசேஷவடிச்சாராயம் ஒருபோத்தல் 8 ரூபாவாகவும் விலையிறங்கியது. அதனால் சாராயங்குடிப்பார் தவறணைகளில்போய் விழுந்தகாரணமாக அவைகளிலே போத்தல்சாராயம் அநேகருக்குக் கிட்டாமல்போய்விட்டதாம். தற்போது தவறணைகளில் ஒருதிரும் சாராயம் 75 சதமாகவும், பார்களிலே 85 சதமாகவும் விலைப்படுகின்றது.

### சீனஅரிசிக்கப்பல்

நீண்டகால வியாபார ஒப்பந்தத்தின்கீழ் லன்ராலோ எனும்கப்பல் 7,000 தொன்சீனஅரிசி ஏற்றிக்கொண்டு சென்றசனிக்கிழமை கொழும்புத்துறைமுகம் வந்துசேரலாயிற்று. இதற்குமுன் மௌலாபாக்ஷ் எனும்கப்பல் 6,000 தொன் சீனஅரிசி ஏற்றிவந்து அன்றுதினம் பறித்துக்கொண்டிருந்தது.

### வீதி விபத்துகள்

இலங்கைவீதிகளில் நடக்கும்விபத்துகள்காரணமாக மூன்று நாளைக்கு இரண்டுபேர் வீதம் மரணமடைகின்றனர்; தினமும் சராசரியாகஏற்படும் 33 விபத்துக்களில் 17 பேர்படுகாயமடைகின்றனர்எனச் சென்றவருடம் நிகழ்ந்த வீதிவிபத்துகள்பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலே சென்றவருடம் 10,050 வீதிவிபத்துகள் ஏற்பட்டு, அவற்றின் விளைவாக 282 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்என்றும், 6,316 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

### பிரதமரின் ஞாபகதினம்

இலங்கைப் பிரதமராக விளங்கியிருந்து காலஞ்சென்ற கௌரவ டி. எஸ். சேனநாயக அவர்கள் மரணமடைந்த முதலாம்ஆண்டு நிறைவுதினம் இந்தப் பங்குனிமாதம் 22-ந்திகதி வருகின்றது. அதனை ஞாபகப்படுத்துதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்நோக்கமாய் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்ப்பாண மத்தியகல்லூரியிலே சிலபிரமுகர்களின் முயற்சியால் நாளை 6-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பபகிரங்ககூட்டம் ஒன்று நடத்தப்படவிருப்பதாக அறிகின்றோம்.

---

### அர்ச். செபஸ்தியார்
## வாலிபர் சங்கம்

திரிகோணமலை, அர்ச். சூசையப்பர் தமிழ்ப்பாடசாலை மண்டபத்திலே சென்ற 22-2-53 ஞாயிறுவாரம் மாலை 6-30 மணியளவில் உதவிக்கட்டளைக் குருவர் வண. எவ். எம். செல்லர்சுவாமியவர்களின் தலைமையிலே இச்சங்கத்தின் ஐந்தாவது வருடாந்த பொதுக்கூட்டம் கடவுள்வணக்கத்துடன் ஆரம்பமானது. மூந்த வண. அதிபர் சுவாமியவர்கள் சங்க நோக்கங்களை எடுத்துக்காட்டி, எவ்வாறு அங்கத்தினர் தமது ஆத்துமகாரியங்களைச் செய்தல் வேண்டுமென்றும், அவர்கள் தமது சமயத்தின்பொருட்டு மக்களிடையே எவ்விதம் சேவைபுரிதல் வேண்டுமென்றும், சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் இராப்பாடசாலையில் அவர்கள் எப்படிப் பங்குபற்றிவர வேண்டுமென்றும் விளக்கமாகக் கூறினார். பின்னர் உத்தியோகஸ்தர் தேர்தலிலே அக்கிராசனராகத் திரு. ஈ. பி. செல்லத்துரை, உபஅக்கிராசனராகத் திரு. எஸ். வி. யேசுதாசன், காரியதரிசியாகத் திரு. எம். எவ். இராசேந்திரம், உபகாரியதரிசியாகத் திரு. எம். வேதநாயகம், தனாதிகாரியாகத் திரு. ஆர். மாட்டீன், நிர்வாகசபை அங்கத்தினர்களாகத் திரு. ஈ. துரைசிங்கம், திரு. எம். அந்தோனிப்பிள்ளை, திரு. ஏ. ஜான்சன், திரு. எஸ். ஹென்றிஆகியோர் சங்கத்தின் பூரண ஆதரவுடன் தெரிவுசெய்யப்பட்டனர். அதன்மேல் புதியஉத்தியோகஸ்தர்கள் தங்கள் நன்றியைச் சமர்ப்பித்தனர். அக்கிராசனர் தமதுநன்றியைத் தெரிவித்தபோது, சங்கவளர்ச்சிக்காக அல்லும்பகலும் அயராது உழைத்துவருவதாய் உறுதிமொழி பகர்ந்தனர். ஈற்றில், கடவுள்வணக்கத்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

எம். எவ். இராசேந்திரம்
காரியதரிசி


டயறம்ஸ்
வருடா வருட
ஈஸ்ரர்கால விற்பனவு
1953-ம் ஆ மார்ச் மீ 2-ந் திகதி
தொடக்கமாக
புதிய பொருட்கள்! மலிந்த விலை!! வந்து பாருங்கள்!!!
வீட்டுப் பாவிப்புக்குத் தகுந்தவை!
பாடசாலை உடைகளுக் குரியவை!
உயர்ந்த ரகச் சேலைகள், சிறந்த கவனத்திற்குரியன.

இனும்!
காசுத்துண்டு
இனாமாகவா?

இனும்! இனும்!! இனும்!!!
இந்த விற்பனை காலத்தில்
ஒவ்வொரு பத்துரூபாபெறுமதியான துணிகள் வாங்குபவருக்கு
ஒவ்வொரு காசுத்துண்டு வீதம் கொடுபடும்.
இப்படியான 5 துண்டு சேர்த்துத் தருபவருக்கு ரூபா 2 காசாகஇனும்.
,, 10 ,, ,, ,, ,, 5 காசாகஇனும்.

இப்படியான இனுங்கள் எங்கே? மறந்துவிடாதீர்!
இவை உங்கள் பழக்கவழக்கமான பட்டுப்புடவைக் கடையில்
மாத்திரம்தான்.
அதுதான்
டயறம்ஸ்
54-60, பெரியதெரு, யாழ்ப்பாணம்.



பாடசாலைச் சேர்விடாப்பு

**Register of Admission, Progress & Withdrawal**
FOR THE USE OF
**Government**
AND
**Assisted English**
AND
**Vernacular Schools.**

ஒருமாணாக்கனைப் பாடசாலையிற்சேர்க்கும்போது, அவன் பெயரைச் சேர்விடாப்பிற் பதியவேண்டும். அங்ஙனம் பதியும்போது அவனுக்குக் கொடுபடவேண்டிய இலக்கத்தையும், பெயரையும் எழுதுவதற்கான இடவசதிகள் இதன் முற்பகுதியிலே 28 பக்கங்களிலும், பிற்பகுதியிலே சேர்வு இலக்கம், பெயர், பிறந்ததிகதி, சேர்க்கப்பட்டதிகதி, குலம், சமயம், பிதாவின் அல்லது காவலாளியின் பெயர், இருப்பிடம், பிதாவின் அல்லது காவலனின் தொழில், முன் படித்தபாடசாலை, ஒவ்வொருவகுப்பிலும் அந்தப்பாடசாலையில் அல்லது முந்தினபாடசாலையில் சோதனை கொடுத்த திகதி, பாடசாலைவிட்டதிகதி, விட்டகாரணம், மற்றும்குறிப்புகள் ஆதியனவற்றைப் பதிவுசெய்து வைப்பதற்கானவசதிகள் 22 பக்கங்களிலும் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றன. விபரங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஒருங்கே இருக்கின்றன.

அரசாங்கபாடசாலைகளுக்கும் உதவிப்பணம்பெறும்பாடசாலைகளுக்கும் மிகஉபயோகமானது.

விலை பிரதி ரூபா 12-00
தபாற்செலவு சதம் 75.

கிடைக்கும் இடம்:
அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாமாதாவின் அனுக்கிரகத்தாலும், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரின் சலுகையாலும் அநேக வருடகாலம் பெரியமதுபானியாகவிருந்த எனதுநாயகர் மனந்திரும்பி எவருமே பிரமிக்கும்படியாகக் கடந்த இரண்டரை வருடகாலமாக மதுபானம்அருந்துவதை முற்றாகமறந்து உத்தமராகச் சீவித்துவருகின்றார். எனது மன்றாட்டுக்கு இரங்கிய பாத்திமாசெபமாலைஅன்னைக்கும், அர்ச். அந்தோனியாருக்கும் நன்றிபாராட்டுமுகமாக இதனைப் பிரசித்தப்படுத்துகிறேன்.

புத்தளம் — மரி அந்தோனிப்பிள்ளை

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 5-1953